Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 24 செவ்வாய்க்கிழமை (08.07.2014) பக்கங்கள் 20 ஓசை –280

# நல்லிணக்க முயற்சிகளுக்கு பொருத்தமான யுக்தி

## ஜனாதிபதியுடன் ரமபோஸா ஆராய்வு



(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் இனங்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகளை அகற்றும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கான பொருத்தமான யுக்திகளை இனங்கண்டுகொள்வது தொடர்பாக கொழும்புக்கு நேற்று விஜயம் செய்திருக்கும் தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஸாவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

நேற்று கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக கொழும்பு வந்த ரமபோஸாவை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வரவேற்றார்.

தொடர்ந்து அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரமபோஸாவுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இரு தலைவர்களும் தமது கடந்த கால அனுபவங்களை பரிமாறிக்கொண்டதுடன் நல்லிணக்க முயற்சிகளுக்கான புதிய யுக்திகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

## ஆஸி. நோக்கிச் சென்ற 41 படகு அகதிகள் மீண்டும் இலங்கைக்கு

(கொழும்பு)

சட்டவிரோத படகு மூலம் அவுஸ்ரேலியா நோக்கி பயணித்ததாகக் கூறப்பட்ட 41 அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு சென்று மீண்டும் இலங்கை கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட 41 புகலிடக் கோரிக்கையாளர்களும் காலித் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கைத்தொழில் மேம்பாடு யாழ். செயலகத்தில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொழிற்துறை சார்ந்த முன்னேற்றங்கள் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இடம் பெற்றது.

இதன்போது அமைச்சின் கீழான பனை அபிவிருத்தி சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் வடகடல் ஆகிய நிறுவனங்களினால் வடமாகாணத்தில் மாவட்டம் தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்துறைசார்ந்த மேம்பாட்டு செயற்திட்டங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவுவதே எமது நோக்கம்

### ரமபோஸா தெரிவிப்பு



(கொழும்பு)

இரண்டு நாள் விஜயமாக கொழும்பு வந்துள்ள தென்னாபிரிக்காவின் துணை அதிபர் சிறில் ரமபோஸா உள்ளிட்ட தூதுக்குழுவினர், வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட குழுவினரை கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று மாலை சந்தித்துப் பேசியுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இலங்கையின் நல்லிணக்க முயறசிகளுக்கு உதவியளிப்பதே தமது நோக்கம் என்று தென்னாபிரிக்க ஊடகங்களுக்கு சிறில் ரமபோஸா கூறியிருந்தார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரசாங்கக் குழுவினர் ஏற்கனவே கடந்த காலங்களில் தென்னாபிரிக்கா சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில், அதிபர் ஜேகப் சூமாவின் இலங்கை தொடர்பான சிறப்பு பிரதிநிதியாக சிறில் ரமபோஸா இந்த ஆண்டின் முற்பகுதியில் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, தென்னாபிரிக்க துணை அதிபர் சிறில் ரமபோஸாவின் கொழும்பு விஜயத்தின் நோக்கம் இருநாட்டு உறவுகளை பலப்படுத்துவதே என்று இலங்கையின் துணை வெளியுறவு அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக அவர் இலங்கை வருவதாக வெளியாகியிருந்த தகவல்களையும் பிரதியமைச்சர் மறுத்திருந்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கட்டாய ஆட்சேர்ப்பால் உறவுகளை இழந்தவர்கள் சாட்சியம்

### முல்லையில் நேற்றும் சோகம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனவர்களை கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் 3 ஆம் நாள் அமர்வுகள் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக அலுவலகத்தில் நேற்று இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக அதிகளவு முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி ஆணைக்குழு கடந்த மூன்று தினங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் நிலையில் நேற்றைய தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்ற 3 ஆம் நாள் அமர்வின் போது 61 பேர் சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தனர். எனினும் சுமார் 40 பேர் வரையில் மட்டும் கலந்து கொண்டு சாட்சியங்களை வழங்கியிருந்தனர்.

கடந்த 2007, 2008 2009 ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகளினால் வலுக்கட்டாயமாக பிடிக்கப்பட்டு பின்னர் காணாமற்போனதாகவே முழுமையான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த சாட்சியங்களின் போது,

விடுதலைப் புலிகளினால் வீட்டுக்கு ஒருவர் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்கமைவாக வீட்டில்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் 282 பேருக்கு கிடைத்தது ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

வடமாகாண தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா கல்வியை முடித்து வெளியேறும் 282 பேருக்கு கொழும்பில் வைத்து நேற்று ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிவைத்தார்.

இவர்கள் அனைவரும் வடக்கிலுள்ள பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். 190 பேருக்கு மாகாண பாடசாலைகளிலும் 92 பேருக்கு தேசிய பாடசாலைகளிலும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் 44 பேர் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கும், 17 பேர் வவுனியா தெற்கு செட்டிகுளம் கோட்டத்துக்கும், 37 பேர் மடு கோட்டத்துக்கும், 25 பேர் துணுககாய் கல்வி வலயத்துக்கும், முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகளுக்கு 45 பேரும், மன்னார் கல்வி வலயத்துக்கு 6 பேரும், கிளிநொச்சிக்கு 17 பேரும,

19 ஆம் பக்கம் பார்க்க



வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299) (C/3735)

## நாவலடியில் வடமோடிக் கூத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவலடி கடலாச்சியம்மன் கோயில் முன்றலில் இன்று இரவு 8.00 மணிக்கு "அருச்சுணன் பாசுபதம்" வடமோடிக் கூத்து அரங்கேற்ற விழா இடம்பெறவுள்ளது.

அண்ணாவியார் வே.தம்பிமுத்து வடமோடிக் கூத்தினை நெறியாள்கை செய்கின்றார்.

## பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் தி.வேத தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினரும், யாவா கொன்ஸ்ரக்ஷன் இயக்குநருமான சுப்பிரமணியம் மணிராசாவும், சிறப்பு விருந்தினராக உடுவில் வைகுறோ நிறுவன இயக்குநர் ஜெ.ரமனதாசும், ஞானம்ஸ் பவுண்டேசன் மாவட்ட இணைப்பாளர் க.சிவநீதன் மற்றும் துணுக்காய் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ச.அருந்தவராசாவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

கௌரவ விருந்தினராக பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் சி.பஞ்சாட்சரமும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (66)

## வடக்கில் மருத்துவர் பற்றாக்குறை இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு இன்னமும் நூறு வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையாக இருந்து வருவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யூட் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வைத்தியர் பற்றாக்குறை இருப்பது சம்பந்தமாக சுகாதார அமைச்சிற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்த அவர் இந்த வருடத்திற்குள் இந்த வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் அனலைதீவு, எழுவைதீவு போன்ற வைத்தியசாலைகளுக்கே இவ்வாறு வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் மூன்று புற்று நோய் விசேட வைத்தியர்கள் கடமையாற்றி வருவதாகவும் குறிப்பிட்ட அவர் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களே அங்கு கடமையாற்றுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## மகிந்த சிந்தனை மகத்தான செயற்றிட்டம் யாழ்.இந்துவில் அடிக்கல் நாட்டு விழா



(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை என்பது நாடு தழுவியதும் பாரபட்சமற்றதுமான கொள்கை திட்டமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மகிந்தோதய தொழில்நுட்பபீடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்றைய தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்த சிந்தனை என்பது மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கொள்கைத்திட்டமேயன்றி ஒருதனிநபர் கொள்கைத் திட்டமல்ல இது நாடுதழுவிய கொள்கைத் திட்டமாகும். அத்துடன், நாடளாவிய ரீதியில் பாரபட்சமற்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் தான் யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் இத்திட்டத்தின் ஊடாக குறித்தொதுக்கப்பட்ட சில செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சுட்டிக்காட்டினார்.

நான் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இக்கல்லூரிக்கும் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியுள்ளேன். வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்பதாக வடமாகாண ஆளுநரின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் கல்வித்துறைக்கு மட்டுமல்லாது பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

இதன்பெறுபேறாகவே கடந்த வருடம் வடமாகாணம் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டதையும் அமைச்சர் இதன்போது எடுத்து விளக்கினார்.

முன்பதாக கல்லூரி வளாகத்திலுள்ள சிவஞானவைரவர் கோவிலில் சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரிசிறி உள்ளிட்டோர் மாணவரின் இசை அணி வகுப்புடன் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

புதிதாக அங்கு நிர்மாணிக்கப்படவுள்ள மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டதுடன் நேற்றைய நிகழ்வுக்கான நினைவுக்கல்லும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து பாடசாலை வளாகத்திலுள்ள ஆறுமுகநாவலரின் உருவச்சிலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மலர் மாலை அணிவித்தார்.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் கணேசராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

60 மில்லியன் ரூபா செலவில நிர்மாணிக்கப்படவுள்ள மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்தின் கட்டுமாணப்பணிகளுக்காக 30 மில்லியன் ரூபாவும், இயந்திர மற்றும் உபகரணத் தொகுதிக்காக 30 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கல்லூரி அதிபர் தலைமையுரையாற்றும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புனர்வாழ்வு அமைச்சராக இருந்த காலப்பகுதியில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான உதவிகளை வழங்கியிருந்ததாகவும், அவரது உதவியின் ஊடாக கல்லூரியில் குறித்த கட்டடம் கம்பீரமாக காட்சியளிப்பதாகவும் தெரிவித்ததுடன், இதற்கு கல்லூரிச் சமூகம் தமது நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது வடமாகாண கல்விப் பணிப்பாளர் ராஜேந்திரன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண கல்வியமைச்சின் உதவிச் செயலாளர் தெய்வேந்திரராஜா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார், வடமாகாண கல்வி அபிவிருத்தி குழுத்தலைவர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் உடனிருந்தனர்.


## பாராட்டி நன்றி நவில்கின்றோம்





பால் நினைத்தூட்டும் தாயினும் சால
தேடி வந்து தேவையறிந்து எமது
எதிர்காலத்திற்கு ஒளி தந்த தேவனுக்கு
நன்றி! நன்றி! நன்றி!

30.05.2014 அன்று யாழ்.மாநகர சபையில்
நூலக உதவியாளர் 12 பேருக்கு
நிரந்தர நியமனம் வழங்கிய எங்கள்
கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களை பாராட்டி நன்றி கூறுவதோடு, எங்களின் நியமனத்திற்காக எங்களோடு துணைநின்ற அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தோழர் அவர்களுக்கும், எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும், தெரிவித்துக் கொள்கின்றோம்.



"உங்களை வாழ்த்த வயதில்லை வணங்குகின்றோம்"

நூலக உதவியாளர்கள் .. 2014
யாழ்.பொது சன நூலகம்

(R/316)


## ஐஸ்கிறீம் நிலையத்தில் பணம் திருடியவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறையிலுள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றிலிருந்து 15 ஆயிரம் ரூபாவைக் கடந்த சனிக்கிழமை இரவு திருடிய குற்றச்சாட்டின் பேரில் துன்னாலையைச் சேர்ந்த இருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கோவில் நேர்த்திக்காகச் சேமித்து வைக்கப்பட்ட பணத்தையே திருடியதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஐஸ்கிறீம் விற்பனை நிலைய உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில் இவ்விருவரையும் கைது செய்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## மஹா கும்பாபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு - தில்லேஸ்வரம் பெருமாள் கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

### வீடு விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற் போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. அரச ஊழியர், வங்கி, ஊழியர், பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவறட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு.

# மன்னாரில் 1200 ரூபா கொடுத்து குடிநீரைப் பெறும் மக்கள்

(மன்னார்)

தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் மன்னார் மாவட்டத்தில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் இப்பகுதி மக்கள் தனியாரிடம் 1200 ரூபா பணம் கொடுத்து பௌசர் மூலம் குடிநீரைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பிரதேச சபையினால் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குடிநீர் விநியோகம் இடம்பெறுவதாகவும் அதுவும் மக்கள் அதிகளவில் வாழும் பிரதேசங்களிலே குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் குடிநீர் இன்றி தவிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடிநீர் இன்மையால் குறிப்பாக குழந்தைகளும், முதியோர்களும் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுவதுடன், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்கள் இதனால் வெகுவாக கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அத்தியாவசியமான குடிநீரைப் பெறுவதற்கு தாம் தனியாரிடம் 1200 ரூபா கொடுத்து பௌசர் மூலம் குடிநீரைப் பெறுவதாகவும், இக்குடிநீர் 15 நாட்களுக்குப் போதுமானதாகவுள்ளது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, குடிநீர் விநியோகம் குறித்து நகரசபை தகுந்த நடவடிகைகயை எடுத்து கிராமப்புற மக்களுக்கும் குடிநீரை வழங்க ஆவன செய்யவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

(வலிகாமம்)

வலி.மேற்கு பிரதேச சபையில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு (2014) புத்தகக் கண்காட்சியும், புத்தக கழிவு விற்பனையும் இன்று காலை 9.00 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பிரதேச ச்பைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபையில் நடைபெறவுள்ள இக் கண்காட்சியில் பல ஆயிரக்கணக்கான பூத்தகங்களையாழ். அம்பிகை புத்தக நிலையம் காட்சிப்படுத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மேற்படி கண்காட்சி யில் பயன்பெறுவதுடன் 20 வீத கழிவில் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்ற வசதிகளையும் பெற நூலகர் பா.விஜயகுமார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

# மாணவனின் பணம் பாடசாலையில் திருட்டு

தென்மராட்சி பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவன் ஒருவரின் தவணைப் பரீட்சைக்காக கொண்டு செல்லப்பட்ட சிறுதொகைப்பணம் புத்தகப் பையினுள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் பற்றி மாணவ்ன் தெரிவிக்கையில் இடைவேளை நேரம் விளையாட்டில் ஈடுபடச் சென்றதாகவும், பின்பு வந்து பார்த்தபோது பணம் திருட்டுப் போயுள்ளதாகவும் சம்பவம் பற்றி ஆசிரியரிடம் கூறியபோதும் பலன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளான்.

இதனால் பிரயாணத்துக்கே பணம் இலலாத நிலையில் சுமார் ஐந்து மைல் தூரம் கால்நடையாக வீடு சென்றதாகவும் தெரிவித்தனர்.

குறித்த மாணவனின் குடும்பம் கடந்த காலப்போரில் கடுமையாக பாதிக்கப்பட்டு வறுமை என்னும நோ்யோடு பெரும் போராட்டம் நடாத்தி வருவதாகவும இதனால் மீளப்பணம் கட்ட முடியாமல் கஷ்ரப்படுவதாகவும் மாணவன் கவலையோடு தெரிவித்தான். (150)

## "அசோகனின் வைத்தியசாலை" நாவல் வெளியீட்டு விழா



மகிழ் வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் "அசோகனின் வைத்தியசாலை" நாவல் வெளியீடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி வலயபிரதிக்கல்விப்பணிப்பாளரும் எழுத்தாளர் இயல்வாணன் (சு.ஸ்ரீகுமரன்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல் விமர்சன உரைகளினை எழுத்தாளர்கள் சி.ரமேஷ் சு.குணேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். இந்நிகழ்வில் இலக்கியத்துறை சார்ந்தோர் கலந்து கொண்டனர். (63)

# வேலையைச் செய்யவேணும் ஏலாமற் போனால் விலகிக் கொள்ளவேணும்... ஐயா, அதுதானே முறை?




சத்தியமாய் சொல்லுங்கோ "எங்கள் தங்கம்" விக்கி அண்ணை!

வடக்கு மாகாண சபைய இயக்கிறதுக்கோ இல்லாட்டி ஒழுங்காக நடத்திறதுக்கோ உங்களால முடியுமா? முடியாதா? இதுக்கு வெளிப்படையான ஒரு பதில நீங்கள் சொல்லோணும்.

உந்த கூட்டமைப்புக்காரர் சனங்களின்ர காதில பூவைக்கிற மாதிரி நீங்களும் சுத்துமாத்து செய்யக்கூடாது. நீங்கள் ஒரு நல்ல மனிசன், பரவாயில்லாத ஆள் எண்டு நம்பித்தான் சனங்கள் உங்களுக்கு வாக்குப் போட்டதுகள்.

நீங்களும் ஒரு பிரதம நீதியரசராக இருந்தனீங்கள். அதவிட ஒரு ஆன்மீகவாதி | இப்பிடியெல்லாம் இருக்கிற நீங்களும் மற்றாக்கள மாதிரி சுத்துமாத்து விடுறதெண்டா அது ஞாயமில்ல. உங்களுக்கும் அது வழியில்ல.

நீங்கள் தேர்தல் காலத்தில சொன்னவையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு ஒருக்கால் நினைச்சுப் பாருங்கோ. ஆமியைக் கலைப்பன் எண்டியள், வடக்கு-கிழக்கை இணைப்பன் எண்டியள், தமிழர் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் காணுவன் எண்டியள் பாதிக்கப்பட்ட சனங்களுக்கு நல்லதொரு எதிர்காலத்த உருவாக்கிக்காட்டுவன் எண்டியள் இன்னும் இப்பிடி எவ்வளவோ விசயங்களை எல்லாம் சொன்னியள். ஆனால் இப்ப பாத்தா அதில ஒண்டைக்கூட நீங்கள் செய்யவும் இல்ல. செய்யிறதாகவும் காணேல்ல.

இப்ப பாத்தால் ஒண்டையும் செய்ய கவர்னர் விடுகிறாரில்ல, மஹிந்த விடுகிறாரில்ல, கோத்தபாய விடுகிறாரில்ல, டக்ளஸ் விடுகிறாரில்ல எண்டெல்லாம் புலுடா விடுறியள். சத்தியமாய் சொல்லுங்கோ பள்ளிக்கூடத்துக்கு வாத்திமார ஒழுங்கா அனுப்புறதுக்கு என்ன பிரச்சினை? ஆஸ்பத்திரியில மருந்து குடுக்கிறதுக்கும், வைத்தியம் செய்யிறதுக்கும் ஆர் தடை!

குளங்கள வெட்டுறதுக்கும், திருத்துறதுக்கும் ஆர் குறுக்க நிக்கிறது. இப்பிடி எல்லாத்தையும் செய்யிறதுக்கு ஒருதரும் தடையில்லையே! மாகாண சபையில பொலிஸ் அதிகாரத்தை தவிர, மற்ற எல்லா அதிகாரமும், வசதியும் உங்களிட்டதானே இருக்குது.

காணி அதிகாரத்தில கூட சரிக்குப் பாதி உங்கட கையிலதானே கிடக்குது. இதையெல்லாம் உச்சிக்கொண்டு நீங்கள் எவ்வளவோ செய்யலாம். தொண் ணூற்றைந்து வீதமான வேலைகளை செய்யக்கூடிய அதிகாரம் உங்கட கையில இருக்குது. ஐந்து வீதமான அதிகாரம்தான் மிச்சமாகத் தேவை.

இருக்கிற தொண்ணூறு வீதத்தை விட்டுப்போட்டு இல்லாத அதிகாரத்தைப் பற்றி பேசித் திரியிறியள். இது ஒரு புத்திசாலித்தனமான வேலை இல்ல. இருக்கிறத வச்சுக்கொண்டு எவ்வளவு காரியங்களை செய்யலாம் எண்டு மாகாண சபையின்ர எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சொல்லிக்கொண்டே இருக்கிறார். இதைத்தான் நானும் சொல்லுறன். நீங்கள் படிச்ச மனிசன், அனுபவசாலி, பிரதம நீதியரசர், நாங்கள் உங்களுக்கு புத்தி சொல்லுற அளவுக்கு நீங்கள் நடக்கப்படாது. அதால தான் சொல்லுறன் மற்றாக்கள் விடுகின்ற புலுடா மாதிரி நீங்கள் புலுடா விட்டு பேரைக் கெடுத்துப் போடாதையுங்கோ.

எடுத்ததுக்கெல்லாம் நீங்கள் சொல்லுறியள் அதிகாரம் இல்ல, அதிகாரம் இல்ல எண்டு. அப்பிடி என்டால் நீங்கள் எல்லாரும் பதவியைத் துறந்து அதிகாரம் இல்லாத மாகாண சபையில ஒரு பிரயோசனமும் இல்லை எண்டு உலகத்துக்கு காட்டலாமே.

முந்தி வரதராஜப்பெருமாள் அப்பிடி ஒரு காரியத்தை செய்து காட்டினவர். அதுதான் சுத்த நேர்மைத்தனம். அதை விட்டுப்போட்டு அதிகாரமில்லாத மாகாண சபை இது எண்டு சனங்களுக்குச் சொல்லி ஏமாத்திப்போட்டு நீங்கள் மட்டும் சொகுசு வாகனங்களில வெட்கம் இல்லாமல் திரியிறியள். இப்பிடியெல்லாம் மனச்சாட்சி உள்ளவையள் செய்வினமோ...

உங்கட வசதிகளைப் பெறுவதற்கு மாகாண சபையில அதிகாரம் இருக்குது. அதுக்கு நிதி ஒதுக்கீடும் இருக்குது. மாகாண சபையில உங்களுக்கு இருக்கிற அதிகாரத்த வைச்சுக்கொண்டு தானே கூட்டுறவு சங்கங்களை கட்டுப்படுத்திறியள், பொது அமைப்புகளின்ர கழுத்தில கயித்தைப் போடுறியள்.

முதலமைச்சர், மந்திரிமார் எண்ட கோதாவில எல்லா இடங்களிலையும் முன்னுக்கு நிண்டு அல்லது முன்னுக்குப்போய் நிமித்திக்கொண்டிருக்கிறியள். ஆனால், சனங்களின்ர வேலை செய்யத்தான் உங்களால ஏலாமல் கிடக்குது. நீங்கள் விலாசம் காட்டுறதுக்கும், வசதிகளை அனுபவிக்கிறதுக்கும்தான் மாகாண சபையை பயன்படுத்திறியள் எண்டதை உங்களால மறுக்க முடியுமோ? ஏன் இந்த கேவலம் கெட்ட பிழைப்பு உங்களுக்கு.

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும் போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ததேகூ வின் அரசியல் நாகரிகம்?

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில், மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் பொதுவேட்பாளர் ஒருவர் எதிர்க்கட்சிகளால் நிறுத்தப் படுவாரெனில், அவரை ஆதரிப்பதற்கான நிபந்தனைகளை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நடத்தும் பத்திரிகை நேற்றுத் தெரிவித்துள்ளது.

இப்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றுவது, அரசமைப்பின் 18வது திருத்தத்தை ஒழித்து 17வது திருத்தத்தை மீண்டும் உயிர்ப்பிப்பது அத்துடன் இனப்பிரச்சினைக்கு பொது வேட்பாளரின் திட்டம் என்ன என்பதையும் அறிவிக்க வேண்டும் என பத்திரிகை கேட்டுள்ளது.

கடைசியாக மிக முக்கியமான நிபந்தனை ஒன்றையும் குறிப்பிட்டுள்ளது. அதாவது, பொது வேட்பாளர் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாது போனால் குறித்த காலத்துக்குள் பதவி துறக்கவும் அவர் தயாராயிருக்க வேண்டும் என்று கறாராகக் கேட்டுள்ளது தமிழரசுக் கட்சி உறுப்பினரின் பத்திரிகை.

அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாது போனால் பதவியைத் துறந்துவிட வேண்டும் என்ற நிபந்தனை வழக்கம்போல "உனக்கல்லடி பெண்ணே ஊருக்குத்தான்" என்று எடுத்துக் கொள்வதா அல்லது தங்களுக்கும் அந்த அரசியல் நாகரிகத்தைப் பொருத்திப் பார்க்கலாமா என்பதை கூட்டமைப்பு உறுப்பினரின் பத்திரிகை தெரிவிக்கவில்லை.

எனினும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தமிழரசுக் கட்சிப் பத்திரிகை காட்டும் உறுதியைக் கண்ட வியப்பில், வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை தேடி எடுத்துப் பார்த்தபோது, அதில் பின்வரும் வாக்குறுதிகளெல்லாம் தட்டுப்பட்டன:

☆ இடம்பெயர்ந்த மக்கள் முன்னைய இடங்களில் துரிதமாக மீள்குடியேற்றப்பட்டு அவர்களது வீடுகளும் வாழ்வாதாரமும் மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்,

☆ இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல் அடங்கலாக மாகாண அபிவிருத்திக்கான விரிவானதொரு நிகழ்ச்சித் திட்டம் இலங்கை அரசாங்கத்தினதும் புலம்பெயர்ந்த தமிழர்களதும் சர்வதேச சமூகத்தினதும் முனைப்பான ஆதரவுடன் மேற்கொள்ளப்படும்,

☆ போரினால் விதவைகளானோரின் துயர்நிலையைத் துடைப்பதற்கு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏனைய தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பினை எமது மாகாணசபை விரைவாகவும் வினைத்திறனோடும் ஏற்றுச் செயற்படும்,

☆ சிதைந்து போன விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களை மீண்டும் நிலைநிறுத்தி அபிவிருத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கோள்ளும்,

☆ அழிந்து போன பொருளாதார மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்களைப் புனர்நிர்மாணம் செய்தல்; பொதுப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்தல்; தனியார்துறையில் நீண்டகால வளர்ச்சிக்கான திறனை உருவாக்குதல்; பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நிலைபேறான வளர்ச்சியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்,

என எத்தனை எத்தனை பொன்னான வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு அடுக்கடுக்காக அளித்திருக்கிறது தமிழரசுக் கட்சி என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

எமது எளிய வினாக்கள் இவைதான்: அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றபபட்டு விட்டனவா? இல்லையெனில் அதற்கான முயற்சிகள் தானும் நடைபெறுகின்றனவா? இல்லை, நிறைவேற்ற ஏலாமல் இருக்கிறதென்றால் தாங்கள் மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் அரசியல் நாகரிகப்படியே பதவிகளைத் தூக்கியெறிந்துவிடும்படி தங்கள் கட்சியினரிடமும் கேட்டுக் கொள்வீர்களா?

ஒன்றில் வாக்குறுதி அளித்தபடியே இன்னின்னவற்றைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று மக்களுக்கு சொல்ல வேண்டும். அல்லாமல், இன்னின்ன தடைகளால் செய்யமுடியவில்லை என்று சொல்வீர்களாயின், பதவிகளைத் துறந்துவிடும் அரசியல் நாகரிகத்தைக் காண்பிக்க வேண்டும். செய்வீர்களா? - ஆசிரியர்.

# மதுபானத்தால் கிடைக்கும் வரி எட்டு வீதத்தால் அதிகரிப்பு

## என்கிறது நிதி அமைச்சு

(கொழும்பு)

இவ்வருடத்தின் முதல் காலாண்டில் மொத்த உற்பத்தி வரியில் 55.8 வீதமானவை மதுபானம் மற்றும் புகையிலை போன்றவற்றினால் பெறப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவிக்கின்றது.

குறித்த காலப்பகுதிக்குள் மதுபானத்தினால் கிடைக்கும் வரி வருமானம் 8 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவிக்கின்றது. இதன்பிரகாரம் இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மதுபானத்தினால் அரசாங்கம் 22.5 பில்லியன் ரூபாவை வரி வருமானமாக ஈட்டியுள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடம் இதே காலப்பகுதிக்குள் 20.8 பில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் மதுபானத்தினால் 8 வீத வருமானம் பெறப்பட்டுள்ளதோடு, அல்கஹோலின் மூலம் 20.9 வீதம் அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் புகையிலை மூலம் 17.5 பில்லியன் பெறப்பட்டுள்ளதோடு கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அது நான்கு வீத வளர்ச்சியையும் காட்டுகின்றது.

புகையிலை மற்றும் மதுபானத்தின் ஊடாக இந்த வருடத்தின் நான்கு மாதங்களில் 40 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

அரச உற்பத்தியில் வரி அறவிடப்படும் மசகு எண்ணெய், வாகன மற்றும் ஏனைய உற்பத்திகளின் மூலம் வருடத்தின் முதல் 4 மாதங்களில் 31.6 பில்லியன் வருமானமாக ஈட்டபட்டுள்ளது.

## புதிய நாணயக்குற்றிகள் செப்ரெம்பரில் புளக்கத்தில்

(கொழும்பு)

புதிய 10 ரூபா நாணயக்குற்றிகள் மத்திய வங்கியினால் புளக்கத்திற்கு விடப்படவுள்ளது.

வரும் செப்ரெம்பரில் புதிய வடிவிலான 10 ரூபா நாணயக்குற்றிகள் வரும்போது 10 ரூபாவுக்கான தட்டுப்பாடு நீங்கி விடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25 மாவட்டங்களுக்கும் இக்குற்றி நாணயம் புளக்கத்திற்கு விடப்படுவதுடன், 10ரூபா நாணயத்தாளின் பாவனை மக்களிடையே அருகிப்போகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தொடர்பில் மேலும் முறைப்பாடுகள் பதிவு

மட்டக்களப்பு குருக்கள்மடம் பகுதியில் உள்ளதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழி தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் நேற்றும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் இருந்து சென்ற அதிகாரிகள் குழு இந்த முறைபபாடுகளை பதிவு செய்வதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. காத்தான்குடி பகுதியில் 1990 ஆம் ஆண்டு கடத்தப்பட்டு குருக்கள்மடம் கடற்கரையோரப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தமது உறவினர்களின் சடலங்களை தோண்டித் தருமாறு நேற்றைய தினமும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்றிருந்த களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு இதுவரை சுமார் 30 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறித்த புதைகுழி உள்ளதாக சந்தேகிக்கப்படும் பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த அகழ்வுப் பணிகளை நீதிமன்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது. காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தலைவரின் கோரிக்கைக்கு அமைய இந்த முறைப்பாடுகள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்த அறிவுறுத்து

(கொழும்பு)

மண்ணெண்ணெய் பகிர்ந்தளிப்பதை மட்டுப்படுத்துமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதன் காரணமாக மண்ணெண்ணெயை நுகரும் குறைந்த வருமானத்தை பெறுவோர் எதிர்வரும் தினத்தில் பல பிரச்சி னைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று எரிபொருள் விநியோகிப்போர் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய் தற்போது 106 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் லீற்றருக்கு 20 ரூபா நட்டம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படுவதாக கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

## வட்டரக்க தேரர் பிணையில் விடுதலை

பொலிஸாரை ஏமாற்றுவதற்காக பொய் முறைப்பாட்டை செய்தார் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, மஹியங்கனை பிரதேச சபையின் உறுப்பினரான வட்டரக்க விஜித்த தேரரை, பிணையில் விடுவிக்குமாறு பாணந்துறை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ருச்சிர வெலிவத்த உத்தரவிட்டுள்ளார்.

10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 சரீர பிணைகளிலும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில். எனக்கெதிரான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள மாட்டேன் எனவும் தான் நிரபராதி எனவும் வட்டரக்க விஜித்த தேரர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

## ஆஸி. குடிவரவு அமைச்சர் இலங்கை வருகை

இலங்கைக்கான அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிஸன் நாளை 9 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு இலங்கை வரவுள்ளார்.

அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சரை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வரவேற்கவுள்ளார்.

# கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 20 பேருக்கும் விளக்கமறியல்

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 20 பேரையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

இவர்களை மன்னார் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியபோதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். 4 படகுகளுடன் இம்மீனவர்கள் 20 பேரையும் கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்த கடற்படையினர், நேற்று முன்தினம் மாலை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில், இவர்களிடம் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர். இதேவேளை, கடந்த 28 ஆம் திகதி தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 17 பேரும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களை வெற்றுக் கனவுகளில் மூழ்கடிக்காமல், கூட்டமைப்பு இனியாவது செயற்பட வேண்டும்

## -1

அபிமன்யு

**அரசியல் தீர்வுக்கான 13ஆவது திருத்தத்திற்கு மாற்றாக இன்னுமொரு சிறந்த அரசியல் யாப்பு ஏற்படுத்தப்படும் சூழ்நிலை வரும்வரை, அரசியல் யாப்பில் ஏற்கனவே இருக்கும் அதனையே நடைமுறைப்படுத்துவது, குறைபாடுகளையும் குழப்பங்களையும் நிவர்த்தி செய்வது, அதனூடாக இன்னல்படும் ஏழைத் தமிழர்களின் வாழ்வாதாரங்கள் செப்பனிடுவது, இதர சமூகங்களிடையேயான நல்லுறவையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவது ஆகியவைதான் இன்றைய சரியான அனுகுமுறையும், காலத்தின் கட்டாயத் தேவையும் ஆகும்.**

**'13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் நாட்டின் பிளவிற்கே வழிவகுக்க வகை செய்ததாகும், எனவே அதனை நடைமுறைப்படுத்தாது முற்றாக அரசியல் யாப்பிலிருந்து நீக்கி விடவேண்டும்' என்பது சிங்களவர்கள் தரப்பின் ஒரு சாரரின் வாதம். இப்படியொரு வாதம் முன்வைக்கப்படுவதால், அதில் ஏதோ தமிழர்களுக்கு நன்மைகள் பயக்கும் விடயங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது.**



தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள், தம் வெற்றுப் பேச்சுகளை விடுத்து, தேர்தல்களில் எப்படியாவது வெற்றிபெறுவது, பதவி சுகங்களை அனுபவிப்பது என்ற நோக்கங்களுக்கு அப்பால், அவற்றிற்கான காத்திரமானதும், தீர்மானகரமானதுமான செயல்வடிவங்களை விரைவில் முன்னெடுக்க அவர்களுக்கு வேண்டிய உந்துதல்களையும் அழுத்தங்களையும் கொடுப்பதும் எமது தவிர்க்க முடியாத தார்மீகக் கடமையாகும்.

பற்பல தீர்வுகள் பற்பலரால் அநேகமாக பொத்தாம்பொதுவாகப் பேசப்படுகின்றன. ஆனால், நாம் விரும்புகிறோமோ இல்லையோ, எங்களின் தனிப்பட்ட எண்ணங்களுக்கும், கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் உவப்பாகவும், திருப்தியாகவும், இருக்கிறதோ இல்லையோ, இன்றைய உள், வெளி யதார்த்தங்களை நாம் சிறிது அறிவுபூர்வமாகச் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்ப்போமானால், ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் ஒரு தீர்வு வரமுடியும்.

அந்த நிலைப்பாட்டையே "எங்கள் உதவிக்கு வாருங்கள்" என்று நாம் கோரும் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, உட்பட்ட அனைத்து நாடுகளும், அன்றும் சரி இன்றும் சரி, தொடர்ச்சியாக எடுத்து வருகின்றன.

அப்படி ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் அரசியல் தீர்வு என்றால்...அது எந்த மாதிரியான அரசியல் கட்டமைப்பு என்றாலும்...இலங்கை அரசியல்யாப்பு முறைமை ஊடாகத்தான் ஏற்படுத்த முடியும்.

அப்படி இனி ஒன்று ஏற்படுத்துவதானால், அரசாங்கத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை வேண்டும். அதாவது, எந்த ஒரு அரசியல் தீர்வும், நாடாளுமன்றத்தில் பிரேரிக்கப்பட்டு சிங்கள மக்களின், மற்றும் முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகளின் அமோக ஆதரவு பெறப்பட்டால்தான் அத் தீர்வு அரசியல் யாப்பில் இடம் பெற்று நடைமுறைப்படுத்த முடியும்.

ஆனால், இதற்கான சாத்தியக்கூறுகள் "அதுவும் சகல இனங்களுக்கிடையேயும் பரஸ்பர நம்பிக்கையும், நல்லுணர்வும் இல்லாத இன்றைய நிலைமையில்" ஒரு நிரந்தர அரசியல் தீர்வை உள்ளடக்கிய அரசியல் யாப்பு மாற்றம் இப்பொழுது சாத்தியமில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

உள்நாட்டு, உலக விவகாரங்களையும் போக்குகளையும் புறக்கணித்து, "ஆயுதப் போராட்டம் மூலந்தான் அரசியல் தீர்வைப் பெற முடியும்" என்றும் "அந்த அரசியல் தீர்வானது தனித் தமிழீழந்தான்" என்று எண்ணுவோரையும், அதற்கான முயற்சிகளில்தான் தாங்கள் சகலவிதமாகவும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்போரையும்,

புலிகளின் பாதைகளையே முன்னெடுக்க வேண்டும் என்று எதுவித சுயவிசாரணைகளை மேற்கொள்ளாமலும், சரித்திரம் தரும் படிப்பினைகளை கவனத்தில் கொள்ளாமலும் கற்பனை உல-கில் வாழ்பவர்களை, பேசுபவர்களை விட்டு விடுவோம்.

இவ்வளவும் போதாதென்று மேலும் தமிழர்களை அழிவுகளுக்கும், அனர்த்தங்களுக்கும் இட்டுச் சென்றே தீருவோம் என்ற அறியாமையினாலோ அல்லது அதி உயர்ந்த அறிவினாலோ கங்கணம் கட்டிக் கொண்டு பேசுபவர்களை, செயற்படுபவர்களை விட்டுவிடுவோம்.

அவர்கள்தான் சரியானவர்கள் என்று மக்கள் எண்ணுவார்கள் என்றால், ஏற்றுக் கொள்வார்கள் என்றால், அது அவர்களின் அழியாத் தலைவிதி எனப் பச்சாதாபப்படுவதைத் தவிர வேறு வழி அறியோம்.

13ஆவது திருத்தம் ஒன்றுதான், இதுவரை "இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரான 66 ஆண்டுகால அரசியல் வரலாற்றில்" தமிழர்களின் அரசியல் அபிலாஷைக்கான இலங்கை அரசியல் யாப்பில் இடம்பெற்ற ஒரே-யொரு அரசியல் தீர்வாகும்.

முழு இலங்கைக்குமான மாகாணசபை அடிப்படையில் அமைக்கப்பட்ட அரசியல் அதிகாரப் பகிர்வு/.பரவலாக்கம் அது. பெரும்பான்மைச் சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெரும்பான்மைச் சிங்களப்பகுதிகளிலும் ஏற்கனவே, ஏறத்தாழ கடந்த 25 ஆண்டுகளாக, நடைமுறையில் இருக்கும் அரசியல் கட்டமைப்பாகும்.

நாங்கள் உதவி கோரும், முன்னர் மன்மோகன் சிங் தலைமையிலிருந்த, இப்பொழுது நாம் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கும் மோடி தலைமையிலான இந்தியாவும் சரி, தொடர்ச்சியாகச் சொல்லி வருவது 13ஆவது திருத்தம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதே.

ஜெனிவாவில், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட ஐரோப்பிய யூனியன், மற்றும் கனடா ஆகிய நாடுகளின் ஆதரவுடன், இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட ஐ.நா. சபைத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதும் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசாங்கம் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே.

இது சம்பந்தமாக இந்திய அரசாங்கம் இலங்கைக்குக் கொடுத்த அழுத்தமே, 25 ஆண்டுகளுக்குப் பின்னர், சென்ற ஆண்டு நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தல்.

25 ஆண்டுகளுக்கு முன்னர், புலிகளின் படுகொலைகளாலும், அவர்களது அன்றைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவினுடனான கூட்டாலும், தமிழீழக் கனவுப் பிரசாரங்களாலும், தமிழ்ப் பிரதேசங்களில் மாகாண அரசாங்க முறைமை நடைமுறைப்படுத்த முடியாத சூழலிருந்தது. அந்த நிலைமை இப்பொழுது இல்லை.

13ஆவது திருத்தத்தை ஆழமாகப் படித்து அதன் குறை நிறைகளை ஆராய்ந்த பின்னர்தான் பேசுகிறார்களோ தெரியாது, "13ஆவது திருத்தில் தமிழர்களுக்கு ஒன்றுமே இல்லை" என்பது தமிழர் தரப்பின் ஒரு சாரரின் வாதம்.

"அது ஒரு முழுமையான தீர்வில்லை, அதில் நிறையக் குறைபாடுகள்" உண்டு என்பது தமிழர் தரப்பின் இன்னொரு சாரரின் வாதம்.

"13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் நாட்டின் பிளவிற்கே வழிவகுக்க வகை செய்ததாகும், எனவே அதனை நடைமுறைப்படுத்தாது முற்றாக அரசியல் யாப்பிலிருந்து நீக்கி விடவேண்டும்" என்பது சிங்களவர்கள் தரப்பின் ஒரு சாரரின் வாதம்.

இப்படியெல்லாம் ஒன்றுக்கொன்று நேர்எதிரான நிலைப்பாடுகள் தத்தமக்குத் தகுந்த தன்மைக்கேற்ப, தத்தமது குறுகிய அரசியல் நிரல்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப எழுந்தமானமாக எடுக்கப்படுகின்றன.

13ஆவது திருத்தத்தின் அமுலாக்கம் நாட்டின் பிளவிற்கே வழிவகுக்கும் என்ற வாதம் முன்வைக்கப்படுவதால், அதில் ஏதோ தமிழர்களுக்கு நன்மைகள் பயக்கும் விடயங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது.

13ஆவது திருத்தம் ஒரு முழுமையான அதிகராரப் பரவலாக்கத்தை/பகிர்வை கொண்டுள்ளதாகக் கொள்ளமுடியாது. அதன் சரத்துகளிலும், அவற்றை நடைமுறைப்படுத்தப்படுவதிலும் குழப்பங்களும் குறைபாடுகளும் உண்டு என்பது அன்றும், இன்றும் சொல்லப்பட்டு வரு-பவையே.

ஆனால், அந்தக் குழப்பங்களும், குறைபாடுகளும், குறிப்பாக என்ன? எவை? என்பவை அடையாளப்படுத்தப்பட்டு நாடாளுமன்றத்திலும், நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு உண்மையான வியாக்கியானங்கள் பெறப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்வதோடு, நிவாரணங்களும் காணப்பட வேண்டும்.

அரசியல் தீர்வுக்கான 13ஆவது திருத்தத்திற்கு மாற்றாக இன்னுமொரு சிறந்த அரசியல் யாப்பு ஏற்படுத்தப்படும் சூழ்நிலை வரும்வரை, அரசியல் யாப்பில் ஏற்கனவே இருக்கும் அதனையே நடைமுறைப்படுத்துவது, குறைபாடுகளையும் குழப்பங்களையும் நிவர்த்தி செய்வது, அதனூடாக இன்னல்படும் ஏழைத் தமிழர்களின் வாழ்வாதாரங்கள் செப்பனிடுவது, இதர சமூகங்களிடையேயான நல்லுறவையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவது ஆகியவைதான் இன்றைய சரியான அணுகுமுறையும், காலத்தின் கட்டாயத் தேவையும் ஆகும். சாக்குப்போக்குகள் சொல்லி, அதனை முற்றாக ஒதுக்குவதோ, நடைமுறைப்படுத்தாது விடுவதோ, குளியல் தொட்டி தண்ணீர் அசுத்தமாக இருக்கிறது என்பதற்காக அதற்குள் இருக்கும் குழந்தையையும் தூக்கி எறியும் சுத்த முட்டாள்தனத்திற்கு ஒப்பான நடவடிக்கையாகும்!.

மகிந்த ராஜபக்சவும் அவரது அரசாங்கமும், 13ஆவது திருத்தத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்த விடுகிறார்கள் இல்லை, விடப் போவதும் இல்லை என்ற ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது.

அப்படியானால், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தல்களில் அமோக வெற்றியீட்டி வடமாகாண-சபை அரசாங்கத்தை நடாத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், மாகாண சபை அமைச்சர்கள், அதிகாரிகள், மகிந்த ராஜபக்ச அரசாங்கம் மாறும் வரை ஒன்றுமே செய்யாமல் மகிந்த ராஜபக்சவையும், அரசையும் குறை கூறிக்கொண்டே, தம் பதவிகள் தரும் சம்பளத்தையும், சலுகைகளையும், அந்தஸ்துக்களையும் அனுபவித்துக் கொண்டே, தங்கள் பதவிக் காலங்களைக் கழிக்கப் போகிறார்களா?.

அப்பதவிக் காலம் முடிந்தவுடன், எதிர்காலத்தில் வரும் நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களிலும், கடந்த தேர்தல்களில் முன்வைத்த அதே கோஷங்களுடன் மறுபடியும் மறுபடியும் தேர்தல்களில் வெல்வதை ஊர்ஜிதப்படுத்துவதுதான் நோக்கம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுவதுதான் நியாயமா?.

பற்பல இன்னல்களின் மத்தியில் இடர்படும் தமிழ் மக்களின் விடிவிற்கு அவர்களது அரசியல், சமூகப் பங்களிப்பு இதுதானா?.

அடுத்த தேர்தல்களிலும் மகிந்த ராஜபக்சவும், அவரது அரசாங்கமுமே மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் (இப்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலையிலும் நகர்வுகளிலும் அதற்கான சாத்தியங்களே அதிகம்) பின் என்ன செய்யப் போகிறார்கள்?

மறுபடியும், மகிந்த ராஜபக்சவும் அவரது அரசாங்கமும், 13ஆவது திருத்தத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்த விடுகிறார்கள் இல்லை, விடப் போவதும் இல்லை என்று கூறிக்கொண்டிருப்பதே தமிழ்த் தலைவர்களின் இப்போதைய அரசியல் நடவடிக்கை என்றால் அப்பொழுதும் அதுவேதான் அவர்களது அரசியல் நடவடிக்கையாக இருக்க முடியும்!

இப்படியே போனால் ஒன்றுமட்டும் நிச்சயம்:...தமிழர்களின் வாழ்வும் வளமும் மேலும் மேலும் குன்றிவிடும்.

(மிகுதி நாளைய முரசில்...)

# தன்னிச்சையான விசாரணை மூலம் உண்மையை வெளிப்படுத்த முடியாது

## என்கிறார் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுத்தலைவர்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகளுக்கு சவால் விடுக்க முடியும் என இலங்கை மனித உரிமை ஆணக்குழுவின் தலைவரும், சேர் ஜோன் கொதலாவல பாதுகாப்புக் கல்லூரியின் சட்டப்பீட பொறுப்பாளர் பிரதீபா மஹானாஹேவுா் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைக்குழு தன்னிச்சையான அடிப்படையில் விசாரணை நடாத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த விசாரணைகளினால் உண்மையை வெளிப்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எந்தவொரு விசாரணைகளின் போதும் நேரில கண்ட சாட்சியங்களின் பங்களிப்பு முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகளில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது புலிகளின் பிடியிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்த சுமார் மூன்று இலட்சம் பொதுமக்களிடம் தகவல்கள் திரட்டாது நடாத்தப்படும் விசாரணைகள் முழுமையடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஓர் விசாரணைகளில் இலங்கை அரசாங்கம் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவிததுள்ளார். நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ள சொற்பஅளவிலான விடுதலைப் புலி ஆதரவாளர்களே விசாரணைகளில் பங்களிப்புச் செய்வாகள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் நோக்கிலேயே இந்தச் தன்னிச்சையான விசாரணை நடாத்தப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். மலேசியா உள்ளிட்ட நாடுகளில் புகலிடக் கோரிக்கையாளர்களாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்



கான முகவர் நிறுவனத்தின் ஊடாக தங்களை பதிவு செய்து கொண்ட விடுதலைப் புலி உறுப்பினர்களை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு சர்வதேச காவல் துறையினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 1979ஆம் ஆண்டு தற்காலிக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 2,862 ஆபத்தான கைதிகள் சிறைகளில் இருந்து தப்பியோட்டம்

(கொழும்பு)

இலங்கை சிறைகளில் இருந்து கடந்த 10 வருடங்களில் 2,862 ஆபத்தான சிறைக்கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தப்பிச் சென்ற கைதிகளில்1,013 பேர் மீண்டும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 1,849 பேர் இன்னமும் கைது செய்யப்படவில்லை எனவும் இவர்கள் தேடப் படுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இனத்துவேஷத்தைத் தூண்டும் கருத்துக்கள் வெளியிட்டால் தண்டனை

## வருகிறது புதிய சட்டம்

இனங்களுக்கு இடையில் பகையுணர்வு மற்றும் துவேஷத்தை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது தண்டனைகுரிய குற்றம் என்ற சட்டத்தை துரிதமாக செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.



இந்தப்புதியு சட்டம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு கூடிய விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், இனங்கள் அல்லது மதங்களுக்கு இடையில் மோதல் நிலை ஏற்படுவது தவிர்க்கப்படும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# பிள்ளைகளின் இணைய பயன்பாடு பெற்றோருக்கு விசேட பயிற்சி

பிள்ளைக்ள் இணையத்தளங்களை பயன்படுத்துவது குறித்து விழிப்பாக இருப்பது தொடர்பில் பெற்றோருக்கு விசேட பயிற்சிகளை வழங்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பயிற்சிகள் அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மட்டங்களில் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பிள்ளைகள் இணையத்தளங்களை பயன்படுத்தும் போது உரிய முறையில் கண்காணிக்கப்படுவதில்லை என்பதால், அவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதை கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# வருமான வரி செலுத்தாதோர் சட்ட நடவடிக்கைக்கு ஆளாகுவர்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு நிறுவனங்களினாலும், தனிநபர்களினாலும் 139 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவைப்பணம் செலுத்தப்படவுள்ளதாக அத்திணைக்களம் தெரிவிக்கிறது.

4000இற்கும் அதிகமான தனியார் நிறுவனங்களும் தனி நபர்களும் சுமார் 139 பில்லியன் ரூபா வருமான வரி செலுத்தவில்லையென உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. வருமான வரிகளைச் செலுத்தத் தவறுபவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எதிரகொள்ளவேண்டி ஏற்படும் என இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளர் பி.எல். எஸ்.லியனகே தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தால் கடந்த மாதகாலத்தில் நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது.1406 தனியார் கம்பனிகள் வருமான வரிக்கான கோப்புக்களை ஆரம்பித்துள்ள போதும் அவை வருமான வரி செலுத்தவில்லை. தமது நிறுவனங்கள் நஷ்டம் அடைந்திருப்பதாக அவ்வாறான நிறுவனங்களால் கூறப்படுகின்ற போதும் அவை இலாபம் ஈட்டுவதாக விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு வரி செலுத்தத் தவறியவர்களில் உணவகங்கள், ஹோட்டல்கள், மென்பொருள் தயாரிப்பாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களும் உள்ளடங்குகின்றனர். இவ்வாறானவற்றில் பல நிறுவனங்கள் கடந்த 3 வருட நிலுவையைச் செலுத்த வேண்டியதாகவும் காணப்படுகின்றன. இதனைவிட 2972 தனிநபர்கள் வருமான வரி செலுதத் தவறியிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளர் பி.எல்.எஸ்.லியனகே, இவர்களுக்கு எதிராக எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் வருமானவரியைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

300 நிறுவனங்கள் தமக்கான பெறுமதி சேர் வரியை (வட் வரி) செலுத்தத் தவறியுள்ளதாகவும், வரி மோசடிகளில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிப்பதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரைச்சொகுசு பேருந்துகளை சேவையிலிருந்து நிறுத்தவேண்டும்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அரைச்சொகுசு பேருந்து சேவைகளை நிறுத்த வேண்டுமென இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.


அரைச் சொகுசு பேருந்து சேவைகளை தவிர்த்து, அதற்குப் பதிலாக சொகுசு பேருந்து சேவைகளை நடாத்துவதற்கு தமது சங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனூடாக பேருந்து துறைக்கு ஏற்படும் பாரிய நட்டம் தவிர்க்கப்படும்.

பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது சிறிய அளவில் கட்டணங்களை உயர்த்தி சொகுசு பேருந்து சேவைகளை நடாத்துவதற்கு அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

போலியான அரைச்சொகுசு சேவைகளை நடாத்துவதால் பொதுமக்களிடம் மோசடியாக பணம் வசூலிக்கப்படுவதாகவும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

# அருகிவரும் முதலைகள் குறித்து கணக்கெடுப்பு



இலங்கையில் உள்ள முதலைகளை கணக்கெடுக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

முதலைகள் குறித்த விசேட நிபுணர் குழுவும் வன விலங்கு திணைக்களமும் இணைந்து இந்த கணக்கெடுப்பினை மேற்கொள்கின்றது.இந்தக் கணக்கெடுக்கும் பணிகள் தொடர்ந்து எதிர்வரும் மூன்று வருடங்கள் வரை இடம்பெறும் என நிபுணர் குழுவின் தலைவர் அன்ஸ்லம் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக அருகிவரும் விலங்குகளில் முதலையும் ஒன்று என கணிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, முதலைகளை கணக்கிடும் பணிகள் இலங்கையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டுபாயில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை பிரஜைக்கு விடுதலை

டுபாய் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை பிரஜை ஒருவர் அந்நாட்டு நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

டுபாயில் அண்மையில், மாற்றியமைக்கப்பட்ட விளக்கமறியல் சட்டங்களுக்கு அமைவாக குறித்த இலங்கையர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, மனைவியால் கைவிடப்பட்ட தனது 4 வயது குழந்தையுடன் சேர்ந்து வாழ்வதற்கு குறித்த இலங்கையருக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த இலங்கையர் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவரின் மனைவி தனது 4 வயது குழந்தையை கைவிட்டு சென்றுள்ளதாக மற்றுமொரு இலங்கையர், அந்நாட்டின் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் கவனத்திற்கு கொண்டு வந்ததாக டுபாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக குறித்த இலங்கையர் செலுத்த வேண்டிய கடன் தொகையை வங்கிக்கு செலுத்தியுள்ளதுடன அவரைத் தடுப்புக்காவலில் இருந்து விடுவித்துள்ளதாக டுபாய் மனித உரிமை திணைக்களத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் மொஹமட் அல் மூர் கூறினார்.

# உளவு பார்க்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தினால் உளவு பார்க்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனம் உலக பல நாடுகள் தொடர்பில் உளவு பார்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உளவுப் பணிகளில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ள நாடுகளின் உலக வரைபடமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உலக வரைபடத்தில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகின் பெரும்பான்மையான நாடுகளை அமெரிக்கா உளவு பார்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசிடமிருந்து பெறும் நிதிகள் மக்களின் வாழ்வாதாரத்துக்கே

## - யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு -

நாம் எந்தத் திட்டங்களைச் செய்தாலும் அது இந்த நாட்டின் அரசியலமைப்புக்குட்பட்ட வகையில் ஒதுக்கப்படுகின்ற நிதிகளை கொண்டுதான் உங்களுக்கு செய்துவருகின்றோம். அதே போல வடமாகாணத்தை நிருவகிக்கின்ற முதலமைச்சருக்கும் அவரது குழுவினருக்கும் அரசு வருடாவருடம் நிதி ஒதுக்கிக் கொண்டுதான் இருக்கிறது. இதனை இவ் .வடபகுதி ஆட்சியாளர்கள் பெற்று அபிவிருத்தியை மேற்கொள்ளாது அசமந்தத்தனமாக இருப்பது தான் தமிழர்களது பகுதிகள் அபிவிருத்தியில் மேம்படாமல் இருப்பதற்குக் காரணம் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை கலாசார மண்டபத்தில் தென்மராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தருடனான சந்திப்பின் போது கருத்துத்தெரிவித்த ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையின் முதல்வராக இருப்பவர் இறையாண்மையுள்ள இலங்கையின் நீதியரசராக இருந்த ஒருவர். இவர் இந்நாட்டின் அன்னத்து சட்ட திட்டங்களையும் நன்கு அறிந்திருப்பவர். ஆனால் அவர் கூட யதார்த்தத்திற்கு மாறான முறையில் தவறானவர்களது கருத்துக்களுக்கு இணங்கி நடைமுறைச் சாத்திய மற்ற அரசியல் நகர்வுகளை செய்து வருகின்றார் என்பது தான வேடிக்கையாக இருக்கின்றது.

மக்கள் பலர் ஒரு நேர உணவுக்குக் கையேந்தும் நிலையில் இருக்கும்போது வடபகுதியை ஆட்சி செய்பவர்கள் தமது சொகுசு வாழ்க்கைக்காக ஆளுநரிடம் கையேந்துகின்றனர்

இவற்றை விட ஒரு படி மேலே சென்று தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் செய்யப்படும் அபிவிருத்திகளை கூட தாங்கள தான் செய்வதாக மக்களுக்கு தவறான செய்திகளை இந்தப் போலி தேசியவாதிகள் செய்து வருகின்றனர் என்றார்.



இச் சந்திப்பின் போது தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், நகரசபை உறுப்பினர் திருக்குமரன் மற்றும் கட்சி உறுப்பினர்களான மெடிஸ்கோ கல்பனா ஆகியோருடன் தென்மராட்சிப் பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரும் கலந்துகொண்டனர்.

## 36 பனடோல் பாவித்த மாணவி வைத்தியசாலையில் அனுமதி

யாழ்மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் அளவிற்கு அதிகமாக 36 பனடோலை ஒரே தடவையில் பாவித்ததால் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருகையில் குறித்த மாணவி உயர்தரத்தில் கல்விகற்று வரும் நிலையில் பெற்றோரின் அழுத்தத்தால் மனமுடைந்த நிலையில் 36 பனடோல் வில்லைகளை ஒரேதடவையில் பாவித்து மயக்கமுற்ற நிலையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (150)

## திருப்பணிவேலைகள் ஆரம்பம்

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் பஞ்சதள ராஜ கோபுர கட்டுமான பணியில் வியாழவரி வரைக்குமான வேலைகள் நிறைவுபெற்று கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு முதலாம் தளத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திருப்பணி சுவிஸ் வாழ் மண்டைதீவு மக்களின் நிதிப் பங்க ளிப்புடன் ஞானலிங்கம் பரணிதரன் பொறுப்பேற்று ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் ஏனைய புலம்பெயர் மக்களிடமிருந்து மற்றைய தளங்களுக்கான திருப்பணி நிதிப் பங்களிப்பினை நாடி நிற்ப தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி)

## பழைய மாணவர் சங்கத்தின் 24ஆவது ஆண்டுநிறைவு விழா

சங்கானை சைவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர்சங்கத்தின் 24ஆவது ஆண்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது. என பாடசாலைச் சமூகத்தினர் அறிவித்துள்ளனர்.

ப.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ்.பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைக்கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

மேலும் பிரான்ஸ் நாட்டில் வதியும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து நடாத் தப்படும் இந்த நிகழ்வில் சங்கானைபிரதேச முன்னணிக்கலைஞர்கள் கௌரவிப்பும் நடை பெறவுள்ளது.

அத்துடன் ஆசியுரையினை யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரி பிரமச்சாரி ஜாக்ரத் சைத் தன்யா நிகழ்த்தவுள்ளார்.'

எனவே, இந்த நிகழ்வுக்கு அனைவரும் சமுகமளித்து ஒத்துழைக்குமாறு பாடசாலைச் சமூகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரமழான் நற்சிந்தனை




றமழான் மாதத்தின் கடைசிப்பத்து தினங்களில் மஸ்ஜித்[illegible] இஃதிகாஃப் இருப்பது சுன்னத்தாகும். நபிமுகம்மது (ஸல்) அவர்களின் வழக்கமாகவும் இருந்து வந்துள்ளன. இதன் நோக்கம் இறைவனுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதாகும். (105)

## முரசின் இன்றைய பலன்

(08.07.2014 செவ்வாய்க்கிழமை)



ஜய வருஷம் ஆனிமாதம் 24 ஆம் திகதி.
மரணயோகம் / ஏகாதசி.
விசாக நட்சத்திரம் மு.இ 11.17 வரை. பின் அனுஷம்.
இராகு காலம் 02.58 - 04.58 வரை. சுபநேரம் 10.28 - 11.58 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பொறுப்பு எதுவும் கோராமல் கொடுத்த கடனை வசூலிக்க முடியாது திண்டாட்டம். புதிய மனை அமைப்பதில் அயலவரின் அடாவடித்தனத்தினால் கவலை கொள்ளல். |
| ரிஷபம் | உதவிகேட்டு வந்த நண்பரின் மேல் நம்பிக்கை இழந்ததால் பின்னடித்தல். பெற்றோரின் புத்திமதியை செவிமடுக்க மறுத்த பிள்ளையை எண்ணித்துக்கித்தல். |
| மிதுனம் | வியாழசுகம் சாதகமாக இருப்பதினால் கைவிட்டிருந்த விவாகப்பேச்சு ஆரம்பித்தல். கைபேசியில் உரையாடிய வேளை விபத்தினின்றும் மயிரிழையில் தப்புதல். |
| கடகம் | புத்திரர் பற்றிய தகவல் கிட்டாமையினால் காவல்துறை சென்று முறையிடல். போட்டிகளில் பங்குபற்றி பாராட்டு/ பரிசில் பெறுதல். |
| சிம்மம் | ஆலய நிர்வாகத்தில் பங்குகொள்ளத் தெரிவுசெய்யப்படல். மனதில் குழப்பநிலை ஏற்படுதல். |
| கன்னி | பத்தில் வியாழன் நீங்கியதினால் கைவிட்டிருந்த தொழிலை ஆரம்பித்தல். இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்ட கடிதம் கண்டு உவகை அடைதல். |
| துலாம் | ஏழரைச்சனி நடைபெறுவதின்ால பணவிடயத்தில் முதலீடு செய்யாமை. வெளியூர் பயணம் கைகூடிவரினும் குடும்பநிலையினால் ஒத்திவைத்தல். |
| விருச்சிகம் | சுபகாரியத்திற்கு ஏற்பாடுகள் செய்யும் வேளை அமங்கல நிகழ்வு ஏற்படல். விடாமுயற்சி தன்நம்பிக்கை மற்றும் திறன் விருத்தியினால் கருமம் சிறப்பாக அமைதல். |
| தனுசு | பிரயாணத்தின் போது ஆவணங்கள் கைதவறும் அபாய நிலையுண்டு. நோய்குணமடைய தெய்வதலத்திற்கு குடும்ப சகிதம் செல்லத்திட்டமிடல். |
| மகரம் | அவசரக்குடுக்கை நிலைமையினால் பதகளிப்பு ஏற்பட்டு பொருட்களை கைதவறவிடுதல். நீண்டநாள் திருமண ஆசை கைகூடியதை எண்ணி மட்டில்லா மகிழ்வடைதல். |
| கும்பம் | மாமன்மாருடன் ஏற்பட்டிருந்த முறுகல்நிலை சமரச நிலையடைதல். புதியன கொள்வனவு செய்த வேளை நம்பகத்தன்மை இன்மையால் கைவிடல். |
| மீனம் | தாயாருக்கு ஏற்பட்டிருந்த பிணி குணமடைவதால் கவலை அற்றுப்போதல். வாகனத்தை ஓட்டும் வேளை நிதானம் / அவதானம்/இறை நம்பிக்கை தேவை |





திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் அழகியற் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. (63)

# ஜேர்மனி, பிரேசில் அரையிறுதியில் இன்று பலப்பரீட்சை




நடைபெற்றுக்கொண்டிருக்கும் உலக கிண்ணக் கால்பந்து போட்டிகளின் முதலாவது அரை இறுதிப் பலப் பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமை (இலங்கை நேரப்படி புதன் அதிகாலை 1.30 மணி) பிரேசில், ஜேர்மனி அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள நிலையில், அந்தந்த நாடுகளின் பெரும்பாலான ஆதரவாளர்கள் அதீத நம்பிக்கையிலும், மிகவும் ஏக்கத்துடனும் உள்ளனர். உலக கால்பந்தாட்ட வரலாற்றில் இரண்டு அணிகளும் தலா 7 தடவைகள் இறுதிப் போட்டியில் விளையாடியுள்ளன. 2002இல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரண்டும் நேரடியாக மோதிக்கொண்டன. இதில் பிரேசில் அணி 2-0 கணக்கில் வெற்றி பெற்று ஐந்தாவது தடவையாகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இன்றைய நிலையில் மிகவும் பலம் பொருந்திய அணிகளாகக் கருதப்படுகின்ற இரண்டு அணிகளும் கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்காக தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வர் என எதிர்பார்க்கலாம்..

இரண்டு அணிகளும் முதலாவது சுற்றில் தங்களது குழுக்களில் தலா 7 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பிடித்துக் கொண்டவையாகும். குழு நிலைப் போட்டிகளில் இரண்டு அணிகளும் தலா 7 கோல்களை அடித்ததுடன் தலா 2 கோல்களையும் விட்டிருந்தன. இதுவரை மொத்தம் 10 கோல்களை இரண்டு அணிகளும் அடித்துள்ளதுடன் பிரேசில் மொத்தம் 4 கோல்களையும் ஜேர்மனி மொத்தம் 3 கோல்களையும் விட்டுள்ளன. இரண்டு அணிகளும் தலா 6 பேர் கோல்கள் அடித்துள்ளனர். பிரேசிலின் நெய்மர் , ஜேர்மனியின் முலர் தலா 4 கோல்களும் பிரேசிலின் டேவிட் லூயிஸ், ஜேர்மனியின் ஹமல்ஸ் தலா 2 கோல்களும் அடித்துள்ளனர்.

நடைபெற்று முடிந்த தலா 5 போட்டிகளில், பந்தைத் தமது அணிவசம் வைத்திருப்பதிலும் கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை அடிப்பதிலும் ஜேர்மனியே முன்னிலை வகிக்கிறது. எதிரணியினர் மீது குற்றம் புரிவதில் பிரேசில் அணியானது ஜேர்மனியிலும் பார்க்க இரண்டு மடங்காக உள்ளது. இரண்டு அணிகளின் கோல் காப்பாளர்களும் இதுவரை நடைபெற்ற போட்டிகளில், எதிரணியினரின் கோல் போடும் சந்தர்ப்பங்களை முறியடித்தவர்கள் என்றால் மிகையாகாது. இரண்டு அணிகளும் இதுவரை கலந்து கொண்ட போட்டிகள் விறு விறுப்பாகவும் கால்பந்தாட்ட இரசிகர்களை மிகவும் உற்சாகமூட்டியவையாகவும் அமைந்திருந்தன. போட்டியின் வெற்றி தோல்வி என்பது ஒரு அணியின் திறமை மற்றும் வீரர்களுக்கிடையேயான கூட்டு செயற்பாட்டில் மட்டுமல்லாது, எதிரணியின் ஒரு சிறு தவறைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதிலுமே தங்கியுள்ளது.

கொலம்பியாவுடனான போட்டியின்போது ஏற்பட்ட காயத்தினால் மைதானத்தை விட்டு வெளியேறிய, பிரேசிலின் நம்பிக்கை நட்சத்திரமான நெய்மருக்கு தொடர்ந்தும் விளையாட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் கடைசியாக விளையாடிய இரண்டு போட்டிகளிலும, மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டதனால் பிரேசில் அணித் தலைவர் தியாகோ சில்வாக்கு அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியைப் பொறுத்தவரை வீரர்களுக்குப் பெரியதாக எந்தப் பாதிப்புமில்லை எனலாம். இது, உலக கிண்ணக் கனவிலுள்ள பிரேசிலுக்குப் பின்னடைவை ஏற்படுத்தினாலும், போட்டியின் 75%பார்வையாளர்களின் ஆதரவு பிரேசில் வீரர்களுக்கு உற்சாகமூட்டும் என்பதில் ஐய மில்லை. இந்நிலையில் இவ்வளவு தடைகளையும் தாண்டி பிரேசில் அணி அரையிறுதியில் வெற்றிபெறுமாயின் அந்த உற்சாகத்துடன் இறுதிப் போட்டியிலும் வெற்றிபெற வாய்ப்பு உண்டு. ஒட்டுமொத்தத்தில் கால்பந்து இரசிகர்களுக்குப் பெரு விருந்தாக இந்தப் போட்டி அமையும் என்பதில் ஐயமில்லை.



**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**

தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## ஜோகோவிச் சம்பியன்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் வெற்றிக் கிண்ணத்தை சேர்பியாவின் ஜோகோவிச் கைப்பற்றிக் கொண்டார்.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது. இதில் சுவிஸ்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மற்றும் சேர்பியாவின் ஜோகோவிச் ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி ஜோகோவிச் 6-7, 6-4, 7-6, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் போராடி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் மூலம் இரண்டாவது முறையாக விம்பிள்டன் கிண்ணத்தை ஜோகோவிச் கைப்பற்றிக்கொண்டார்.

## ருவென்ரி-20 தொடர் சமநிலை

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடர் சமநிலையானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றன. இதில் பிளைச்சர் 62 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வில்லியம்ஸன் 37 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதை பிளைச்சர் பெற்றுக்கொண்டார்.

## களத்திற்கு வெளியில்...

எனது வலியையும், வேதனையையும் விபரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் விளையாட வேண்டும், என்ற கனவு, ஆசையை அவர்கள் (கொலம்பியா) தட்டிப்பறித்து விட்டார்கள். ஆனால் பிரேசில் உலக சம்பியன் ஆக வேண்டும் என்ற கனவு இன்னும் முடிவடையவில்லை. அந்தக் கனவு தொடருகிறது. இன்னும் இரண்டு ஆட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. உலகக் கிண்ணத்தைக் கையில் ஏந்துவதற்குரிய எல்லா சாத்தியமான முயற்சிகளையும் எங்கள் அணியின் சக வீரர்கள் மேற்கொள்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். எனவே உலக சம்பியனாக வலம் வர வேண்டும் என்ற கனவை என்னால் நிறைவேற்ற முடியும். விரைவில் களத்திற்கு திரும்புவேன்.

**நெய்மார் (பிரேசில் நட்சத்திர வீரர்)**

நெய்மர் போன்ற உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் போட்டியில் இருந்து பாதியில் விலக நேரிடுவது எப்பொழுதும் வருத்தத்திற்குரிய விடயம். பிரேசில் அணியில் மேலும் பல அற்புதமான வீரர்கள் இருக்கிறார்கள். நெய்மரின் இழப்பை அவர்களால் ஈடுகட்ட இயலும்.

**ஹன்சி பிளிக் (ஜேர்மனியின் உதவி பயிற்சியாளர்)**

காலிறுதி ஆட்டத்தில் மெஸ்சி நன்றாகவே விளையாடினார். கோல்களை அடிப்பது மட்டுமே அவரது ஆட்டம் அல்ல. ஒவ்வொரு முறை மெஸ்சியிடம் பந்து வரும்போதும் அது அனைவரிடமும் நம்பிக்கையை உருவாக்குகிறது. எதிரணியினருக்கு ஒரு பயத்தை ஏற்படுத்துகிறது. அவர் கோல்களை அடிக்கிறாரா? இல்லையா? என்பது முக்கியமல்ல! கோல்களை தாண்டி ஒரு விளையாட்டில் நிறைய விடயங்கள் இருக்கின்றன. ஒரு பந்தைக் கூட வீணாக்காத மெஸ்சியைப் போன்ற ஒரு வீரர் அணியில் இருப்பது எப்போதுமே பாலைவனத்தில் இருக்கும் நீரைப்போன்றதுதான்.

**அலிஜான்ட்ரோ சாபெல்லா**
**(ஆர்ஜன்ரீனா பயிற்சியாளர்)**

கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின், ஆர்ஜன்ரீனா அணியால் அதிகபட்சமாக காலிறுதிப் போட்டியைத் தாண்ட முடியவில்லை. ஆனால் இம்முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, அரையிறுதிக்கு முன்னேறியது மகிழ்சசி. இது எளிதான காரியமல்ல. பெல்ஜியத்துக்கு எதிரான போட்டி முழுமையாக இருந்தது. இப்போட்டியில் நிறைய கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. நெதர்லாந்துக்கு எதிரான அரையிறுதி சவால் நிறைந்ததாக இருக்கும்.

**மெஸ்சி (ஆர்ஜன்ரீனா கப்டன்)**

காலிறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனாவின் ஆட்டம் என்னை எந்த வகையிலும் கவரவில்லை. சாதாரணமான அணி போன்றே அவர்கள் ஆடினார்கள். நான் இந்த வகையில் விளையாடியிருந்தால், நிச்சயம் பெல்ஜியம் ஊடகங்களின் கடுமையான கோபத்திற்கு ஆளாகியிருப்பேன். இந்த ஆட்டத்தில் போட்டி நடுவர், மெஸ்சிக்கு சாதகமாக நடந்து கொண்டார். மெஸ்சி மூன்று முறை பவுல் செய்தும் அவருக்கு ஒரு மஞ்சள் அட்டை கூட நடுவர் கொடுக்கவில்லை. மாறாக நாங்கள் ஒரே முறை செய்த பவுலுக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

**மார்க் வில்மோட்ஸ் (பெல்ஜியம் பயிற்சியாளர்)**

நீங்கள் தான் பெனால்டிக்கு பொருத்தமான கோல் காப்பாளராக இருப்பீர்கள் என்று டிம் குருலிடம் முன்பே கூறியிருந்தேன். பொதுவாக ஒவ்வொரு கோல் காப்பாளர்களும் ஏதாவது விடயத்தில் தனித்துவம் பெற்றவர்களாக இருப்பார்கள். அந்த வகையில் பெனால்டி வாய்ப்பில் இருந்து அணியைக் காப்பாற்று வதில் டிம் குருல் கெட்டிக்காரர். அதனால் தான் அவரைப் பயன்படுத்தினோம். ஆனால் அடுத்த ஆட்டத்திற்கு கோல் காப்பாளராக யார் தொடருவார் என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் அப்பணியை சைலிசென் தான் செய்வார்.

**லூயிஸ் வான் கால் (நெதர்லாந்து பயிற்சியாளர்)**

காலிறுதிப் போட்டி வரை வெளியில் இருந்து பார்த்து விட்டு, திடீரென களத்தில் இறங்கி பெனால்டியை தடுப்பது என்றால் எளிதான விடயமல்ல. இதற்கு மேல் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. மொத்தத்தில் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் விளையாட வேண்டும் என்ற எனது கனவு நனவாகி விட்டதாக உணர்ந்துள்ளேன்.

**டிம் குருல் (நெதர்லாந்து வீரர்)**

# எல்லே களியாட்டம் இராணுவ அணி சம்பியன்

## காலிறுதி வரை முன்னேறியது கரவெட்டி இமையாணன்






(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாதுகாப்புப் படை தலைமையகம் இலங்கை எல்லே விளையாட்டு சம்மேளனம் இணைந்து நடாத்திய எல்லே களியாட்டத் தொடரில் இராணுவ அணி இரு பிரிவுகளிலும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இத்தொடரின் அரையிறுதி வரையான போட்டிகள் கடந்த 5,6ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி, துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ். மத்திய கல்லூரி, பலாலி இராணுவ முகாம் மைதானங்களில் நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதிப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இராணுவ அணியும் நீர்கொழும்பு ஒலுவகொட்டுவ ஜனபத்த அணியும் மோதின.

நாற்பது பந்துகளைக் கொண்ட போட்டியில் முதலில் ஆடிய இராணுவ அணி 14 விக்கெட்டுக்களை இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 17 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய நீர்கொழும்பு ஒலுவகொட்டுவ ஜனபத்த அணி 15 விக்கெட்டுக்களை இழந்து ஒன்பது ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் எல்லே களியாட்டக் கிண்ணத்தை இராணுவ அணி கைப்பற்றிக் கொண்டது. பெண்கள் பிரிவிலும் இராணுவ அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எல்லேப் போட்டியை பிரபல்யப்படுத்தும் வகையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டம் சார்பில் மிருசுவில், கோப்பாய், இயக்கச்சி, உரும்பிராய் மைக்கல், வடமராட்சி இமையாணன் ஆண்கள் பிரிவிலும், மானிப்பாய் இந்து, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம், இயக்கச்சி விளையாட்டுக்கழகத்தின் பெண்கள் பிரிவும் பங்குகொண்டன. இதில் இமையாணன் அணி காலிறுதிப் போட்டிக்கு வரை முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு முன்னதாக பிரதம விருந்தினர்கள் பான்ட் வாத்திய இசையுடன் வரவேற்கப்பட்டதுடன் வீரர்களுக்கும் அறிமுகம் செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வின் அதிதிகளாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயாரத்நாயக்க, இராணுவ எல்லே சங்கத்தின் தலைவரும், யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் உதயபெரேரா ஆகியோர் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

இப்போட்டி நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இராணுவ எல்லே சங்கத்தின் உபதலைவர் பிரிகேடியர் திருநாவுக்கரசு மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்.பி., பா)

# முல்லைத்தீவு கல்வி வலயம் சாதனை தேசிய போட்டிக்கு 104 வீரர்கள் தகுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிக்கு 104 வீர,வீராங்கனைகள் தகுதிபெற்றுள்ளனர்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு வலயம் அதிக பதக்கங்களைப் பெற்று ஐந்தாவது இடத்தைப் பிடித்துச் சாதனை படைத்தது.

இதில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வீரர் எஸ். விதுர்சன், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி வீராங்கனை யோ. நிதர்சனா ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஒட்டுமொத்தமாக முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து 104 வீர,வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இது குறித்து முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மாலினி வெலிங்ரன் கருத்துத் தெரிவிக்கையில், பல்வேறு வளப் பற்றாக்குறைகள் - அசௌகரியங்களுக்கு மத்தியில் மாகாண போட்டிகளில்பங்குபற்றிச்சாதனைபடைத்திருப்பது பாராட்டப்படவேண்டிய விடயம். நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மெய்வல்லுநர் மற்றும் பெருவிளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் சிறப்பான திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இதன் காரணமாகவே எமது வலயத்திலிருந்து 104 வீர,வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர். தேசிய மட்டப் போட்டிகளில் இவர்கள் வெற்றிபெறுவதற்கான சகல வசதி வாய்ப்புகளும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிச்சயம் தேசிய போட்டிகளில் அதிக பதக்கங்களை வென்று எமது வலயத்திற்கும், மாவட்டத்திற்கும் இவர்கள் நிச்சயம் பெருமை சேர்ப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுச் செய்திகள்

# வசந்தசிறி, சீமா, கலைமகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடாத்திவரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு சண்டிலிப்பாய் வசந்தசிறி, மீசாலை சீமா, அச்சுவேலி கலைமகள் அணிகள் முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டித் தொடர் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இரவு மூன்று போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி, மட்டுவில் விநாயகர் அணிகள் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் நீர்வேலி ஐக்கியம், மீசாலை சீமா அணிகள் மோதின. இதில் மீசாலை சீமா அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி அணியும் அச்சுவேலி கலைமகள் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இருப்பினும் அச்சுவேலி கலைமகள் அணி இறுதிக் கட்டங்களில் எழுச்சிபெற்றது. இறுதியில் அச்சுவேலி கலைமகள் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# கொக்குவில் இந்து அபார வெற்றி

சந்தோஷ், சருஜன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா நெழுக்குளம் மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வவுனியா நெழுக்குளம் மகாவித்தியாலய அணி 38 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நியூரன் 39, கோகுலன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சருஜன் நான்கு, பிரணவன், டிறுஷன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 28 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சந்தோஷ் ஆட்டமிழக்காது 52, டிறுஷன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபிஷன், டிலக்ஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. (17)

# தொடரை வெல்வோம்

ஆரம்பம் சிறப்பானதாக இருந்தபோதிலும் நடுவரிசையில் நாங்கள் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தியதே தோல்விக்கான முக்கிய காரணம். அம்லா, வில்லியர்ஸ் ஆகியோரின் பிடிகளை நாங்கள் தவறவிட்டதும் போட்டியில் எங்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது. அடுத்து வரும் போட்டிகளில் இது போன்ற தவறுகளைத் திருத்திக்கொள்வோம் என்று நம்புகின்றேன். தென்னாபிரிக்க வீரர்களின் பந்து வீச்சு அபாரமாக இருந்தது.

எனவே, அடுத்து நடைபெறும் இரு போட்டிகளிலும் சிறப்பான முறையில் செயற்பட்டு தொடரை 'வெல்வோம் என இலங்கை அணிக் கப்டன மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அணி வலுவான அணி. உள்ளூரில் அந்த அணியை வீழ்த்துவது கடினம். முதல் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தியிருப்பதால் தொடரை வெல்லும் நம்பிகை ஏற்பட்டுள்ளது என ஆட்டநாயகன் விருது வென்ற அம்லா தெரிவித்துள்ளார்.

# புலிகளின் மீறல் சம்பவங்களை முன் வைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமை ஏற்க வேண்டும்

4

டி.பி.எஸ்.ஜெயராஜ்

சர்வதேச விசாரணைக்கான அழைப்பு இப்போது ஐ.நா. விசாரணையாக நடைமுறைக்கு வந்துள்ளது. இது தொடர்பாக ரி.என்.ஏ. பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டக் கழுகுகளான இரட்டையர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் சர்வதேச விசாரணைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள பிரகடனங்கள், கட்சியானது கொள்கைவழியான அணுகுமுறையினை பின்பற்றுகிறது என்கிற ஒரு உணர்வினை உண்டாக்க முயற்சிக்கிறது என்பதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம்.

முழு உண்மையும் வெளிப்படுத்தப்பட வேண்டும் மற்றும் பொறுப்புக்கூறல் உண்மையான நீதியையும் மற்றும் நீடித்த நல்லிணக்கத்தை முன்னேற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி உள்ளார்கள். இந்த நிலைப்பாட்டை மேற்கொள்வதன் மூலம் ரி.என்.ஏ. தார்மீக நெறிமுறைகளின் உயர் தரத்தை பேணுவதுடன், இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு பாடம் நடத்தவும் முயற்சிக்கிறது.

இந்த விடயம் பற்றி ஜூன் 17, 2014 இல் பாராளுமன்றத்தில ரி.என்.ஏ தலைவரும் அனுபவம் மிக்க திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் நாவன்மை மிக்க உரையொன்றை நிகழ்த்தினார். ஐ.நா. விசாரணைக்கு ராஜபக்ஸ அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பதை விமர்சித்த சம்பந்தன் அதற்கு ஒத்துழைக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தியதோடு அதற்கு ஆதரவாக பல காரணங்களையும் எடுத்துரைத்தார்.

எல்.ரீ.ரீ.ஈ.க்கு எதிராக நிரல் படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டுகள் பற்றி வெளிப்படையான மேற்கோள் எதுவும் அதில் இருக்கவில்லை. எனினும் அதன் முடிவுரையில் சாதகமான சில வகை வெளிப்பாடுகள் இருந்தன. சம்பந்தன் சொன்னது இதுதான்:-

“ஐக்கிய நாடுகள் மூலமாக வரவுள்ள விசாரணை இலங்கைக்கு எதிரானதல்ல. அது மனித நேயம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் என்பனவற்றை மொத்தமாக மீறியவர்களுக்கே எதிரானது. அது முழு நாட்டையும் பாதிப்புக்கு உட்படுத்திய தண்டனை விலக்கு கலாசாரத்துக்கு எதிரானது. அது வடக்கில் காணாமற்போன இளைஞர்கள் பற்றிய சம்பவங்கள் மற்றும் அதேபோல தெற்கில் காணாமற்போன இளைஞர்கள் பற்றிய சம்பவங்கள் என்பனவற்றுக்கே எதிரானது. அது எல்.ரீ.ரீ.ஈ புரிந்த குற்றங்கள் மற்றும் ஆட்சியினர் புரிந்த குற்றங்கள் என்பனவற்றுக்கு எதிரானவை.

இந்த காரணங்களுக்காக இரு தரப்பினர்களைப் பற்றிய இந்த விசாரணையை ரி.என்.ஏ. ஐயப்பாடு எதுவுமின்றி வரவேற்கிறது. தமிழ் மக்களாகிய நாம் எங்கள் பெயரால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களைப் பற்றி நமக்குள்ளேயே ஒரு சுயபரிசோதனை செய்வதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக இந்த விசாரணையை கருதி அதை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். அரசாங்கமும் இந்த விசாரணையை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி, வியத்தகு முறையில் கடந்த கால நிகழ்வுகளை உடைத்தெறிந்து விட்டு, அனைத்து இலங்கை மக்கள் மத்தியிலும் நீதி, நல்லிணக்கம், மற்றும் ஒற்றுமை என்பன நிலைத்திருக்கும் ஒரு புதிய சகாப்தத்துக்கு இட்டுச் செல்லும்படி அழைப்பு விடுக்கிறோம்”



ஒரு தமிழனின் கண்ணோட்டத்தில் இந்தப் பந்தியிலிருந்து கவனிக்கத் தக்கது என்னவென்றால்:-

1. “அது எல்.ரீ.ரீ.ஈயின் குற்றங்களுக்கு எதிரானது மற்றும் ஆட்சியினரது குற்றங்களுக்கு எதிரானது”

2. “இந்தக் காரணங்களுக்காக ரி.என்.ஏ இரு தரப்பினரையும் பற்றிய விசாரணையை ஐயப்பாடு எதுவுமின்றி வரவேற்கிறது”

3. “தமிழ் மக்களாகிய நாம் எங்கள் சொந்தப் பெயரால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை பற்றி ஒரு சுயபரிசோதனை செய்வதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக இந்த விசாரணையை கருதி அதை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.”

சம்பந்தனின் இந்த வலியுறுத்தல்களின் பின்னுலுள்ள உள்நோக்கம் என்னவென்று யாருக்கும் தெரியாது. எனினும் அதன் முகமதிப்பு, அவர்கள் புத்துணர்வுடன் அதை வரவேற்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

பல தசாப்தங்களாக வன்முறையற்ற மற்றும் வன்முறையான இரு மட்டங்களிலும் மோதல் அரசியலை பின்பற்றிய தமிழர்களுக்கு தங்கள் சமீபத்தைய இக்கட்டான நிலையை மதிப்பீடு செய்து தங்கள் சமூகம் எந்த இடத்தில் தவறிழைத்துள்ளது என்பதை அறிவதற்கு உண்மையில் காலம் கனிந்துள்ளது.

முள்ளிவாய்க்காலின் இராணுவ தோல்வி, அரசியல் பாதையின் உச்சக் கட்டமாகும், அது ஒருக்கால் பெருமை பிடித்த இணக்கமற்றவர்களாக இருந்தவர்களை தளர்வடையச் செய்து சிறப்பாகத் தனிமைப்படுத்தியது. தமிழ் அரசியல் தடையாக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரன், உயிரற்று, பாதி நிர்வாணமான நிலையில் நந்திக் கடலேரிக் கரையில் கிடந்தது, தமிழ் அரசியல் போராட்டத்தின் தோல்வியை துயரத்தோடு விளக்கியது.

ஆகவே இலங்கைத் தமிழ் மக்கள் கடந்த கால பிரதிபலிப்புக்களிலிருந்து மீண்டு, தங்கள் அரசியல் நிலையை யதார்த்தமானதாகவும் நடைமுறைக்கு ஏற்றபடியும் மீள் கட்டமைப்பதற்கான சரியான நேரம் இதுதான். தமிழ் மக்கள் எல்.ரீ.ரீ.ஈ உடனான தங்கள் உறவுகளை மீள் பரிசீலனை செய்வதுடன் புலிகளினால் திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு இழைக்கப்பட்டுள்ள தீமைகளை முக்கியமாக ஆராயவேண்டும்.

இதைச் செய்வது காளை மாட்டுக்கு கொம்பை பிடுங்குவது போல அல்லது புலிக்கு அதன் பல்லை பிடுங்குவது போல இருக்கும். இராஜவரோதயம் சம்பந்தனின் வார்த்தைப்படி புலிகள் செய்த குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும், மற்றும் அத்தகைய ஒரு விசாரணை “தமிழ் மக்களாகிய எங்களுக்கு எங்கள் சொந்தப் பெயரால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களைப் பற்றி ஒரு உள்ளாய்வு செய்வதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக இருக்கும்” என்பதை உணர்த்தும்.

எல்.ரீ.ரீ.ஈயினால் செய்யப்பட்டதாக கூறப்படும் குற்றங்கள் ஏராளம். அவற்றுள் அநேகமானவை தமிழ் மக்களின் பெயரால் அவர்கள் சார்பாக நடத்தப்பட்ட ஆயுதப் போரில் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டவைகளே.

(தொடரும்)

# உருத்திரகுமாரன் யாருடன் நிற்கிறார்?

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டத்தரணியாகவும், தமிழ் காங்கிரஸ் பிரமுகராகவும், யாழ்ப்பாணம் மாநகர முதல்வருமாக இருந்த வி.விசுவநாதனின் செல்வப் புதல்வர் உருத்திரகுமாரன் என்பவர் அமெரிக்காவில் இருந்துகொண்டு “நாடு கடந்த (நாடில்லாத) தமிழீழ அரசாங்கம்” என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நடாத்தி வருகின்றார். அவரது “அரசாங்கத்தை” அங்கீகரித்த ஒரேயொரு நாடு ஒரு வருடத்துக்கு முன்னர் உருவான தென் சூடான் மட்டுமே!

(இவர்களின் நட்பு நாடு உருவான பின்னர் அந்நாட்டில் அதிகாரப் போட்டியால் இவர்களுக்கு விருப்பமான குருதி ஆறாக ஓடுவதைப் பார்த்து உலகம் திகைத்து நின்றாலும் இவர்களுக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை)

இந்தியாவில் புதிதாக பிரதமர் பதவிக்கு வந்துள்ள நரேந்திரமோடி விரைவில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கிறார். அப்பொழுது “தமிழீழப் பிரதமர்” உருத்திரகுமாரனையும் மோடி சந்திப்பார் என தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர்களில் ஒருவர் அண்மையில் திருவாய் வேறு மலர்ந்திருக்கிறார்! (சில வேளைகளில் ஒபாமாவைச் சந்திக்கும் சாக்கில் உருத்திரகுமாரனைச் சந்திக்கத்தான் உண்மையில் மோடி செல்கிறாரோ என்னவோ?)

இந்த உருத்திரகுமாரனின் நிறுவனம் அடிக்கடி அறிக்கைகளையும் ஊடகங்களுக்கு அனுப்பி வருகிறது.

அந்த அறிக்கைகளில் சில முசுப்பாத்திக் கதைகளை அடிக்கடி காண முடிகிறது.

அப்படி ஒரு அறிக்கை அண்மையில் வந்தது.



அதில் இலங்கை அரசின் 'போர்க்குற்றவாளிகள் என்று சொல்லி சிலரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளில் செயற்படும் சில புலிச்சார்பு அமைப்புக்களையும், தனிநபர்களையும் தடை செய்து அறிவிப்பு வெளியிட்ட பின்னர் உருத்திரகுமாரனின் அறிக்கை வந்துள்ளது. பதிலடி போலும்.

சில நேரங்களில் சில நகைச்சுவைகளிலும் ஆழமான அர்த்தங்கள் பொதிந்திருப்பதுண்டு. உருத்திரகுமாரனின் இந்தப் போர்க் குற்றவாளிகள் அறிக்கையிலும் அப்படியான விடயம் உள்ளே பொதிந்திருக்கிறது.

உருத்திரகுமாரனின் போர்க் குற்றவாளிப் பட்டியலில் முதலாவதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பெயர் உள்ளது. அப்படியே அவரது சகோதரர் கோத்தபாய, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பல முன்னாள் இந்நாள் இராணுவ உயரதிகாரிகள் எனப் பலரின் பெயர்கள் உள்ளன. இந்தப் பட்டியலில் ஒரு விசேடம் என்னவென்றால், முதல் மூன்று நான்கு பெயர்களுக்குள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெயரும் இருக்கிறது!

அப்படியானால் முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் கட்டாயம் இருக்க வேண்டுமே எனத் தேடிப்பார்த்தால்... இல்லவே இல்லை. வேறு யாராவது ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களின் 'பெயர்களாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

1977இல் ஆட்சிக்கு வந்த ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவரைத் தொடர்ந்து ஆர்.பிரேமதாசவும் 1994 வரை தொடர்ச்சியாக 17 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் 1977, 1981, 1983 என மூன்று தடவைகள் தமிழர்களுக்கு எதிரான இன வன்செயல்கள் அவர்களது அரசாங்கங்களாலேயே திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழ் மக்களுக்கு எதிரான போரும் அவர்களால்தான் ஆரம்பிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க ஜே.ஆரின் அரசிலும், பிரேமதாசவின் அரசிலும் முக்கியமான அமைச்சராக இருந்து அந்தக் காலப் போர் நடவடிக்கைகளில் ஒரு பங்காளியாக இருந்தவர். 83ஆம் ஆண்டு இனவன்செயலின் போது கொழும்பு புறக்கோட்டைப்

# ஐ.நா. விசாரணையால் தமிழர்களுக்கு என்ன கிடைக்கும்?




- யதீந்திரா கட்டுரையிலிருந்து.

தமிழர்கள் மத்தியில் ஐ.நா. விசாரணை குறித்து அளவுக்கதிகமான நம்பிக்கைகள் ஊட்டப்பட்டுள்ளன. ஆனால், இவ்வாறான விசாரணைகளின் எதிர்காலத் தாக்கம் என்பது முற்றிலும் சர்வதேச உறவுகளிலேயே தங்கியிருக்கிறது. உதாரணமாக, இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரம் தொடர்பில், இஸ்ரேல் மீது பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை இஸ்ரேல் தொடர்பில் ஐ.நா.வினால் எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்க முடிந்ததில்லை. இதற்குக் காரணம் இஸ்ரேல் - அமெரிக்க உறவாகும்.

அடிப்படையில் சர்வதேச உறவுகள் என்பது சர்வதேச அதிகாரமாகும். அந்த அதிகாரம் என்பது அவரவரின் நலனாகும். எனவே, இந்த யதார்த்தத்தை தாண்டி எந்தவொரு விசாரணையும் எவரது குரல் வளையையும் நசுக்கிவிடப் போவதில்லை. எனவே, இந்த இடத்தில் இலங்கையின் மீதான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணையானது உடனடியான அதிசயங்கள் எதனையும் நிகழ்த்திவிடப் போவதில்லை.

மேற்படி விசாரணை இம்மாதத்திலிருந்து ஏப்ரல் நடுப்பகுதி 2015 வரையான காலப்பகுதியை உள்ளடக்கியதாக இடம்பெறவுள்ளது. இதன் விளைவாக இலங்கை யுத்தத்தில் பங்குகொண்ட இரு தரப்பினரும் சில குற்றங்களை இழைத்துள்ளதாக முடிவு வரக்கூடும். ஆனால், இந்தக் காலப்பகுதியில் மேற்படி விசாரணைக் குழுவிற்கு கிடைக்கும் சாட்சியங்களின் அடிப்படையில்தான் முடிவு வெளியாகும். ஆனால், அரசின் மீதான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு [illegible]றுக் கொள்ளப் போவதில்லை.

எனவே, இந்த விடயம் அடுத்து வரவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் விவாதிக்கப்படும். இதன் பின்னர் ஒரு பிரேரணை கொண்டு வரப்படலாம். அவ்வாறில்லாது, விசாரணையின் முடிவை ஐ.நா பொதுச் சபையின் பரிசீலனைக்கும் கொண்டு செல்லக்கூடிய வாய்ப்புண்டு. ஆனால், இப்படியான நடவடிக்கைகளின் மூலம் நிகழப்போகும் இறுதி விளைவு என்னவாக இருக்க முடியும்?

இந்த இடத்தில், கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவிப்பிள்ளை கூறிய பதில் ஒன்று நினைவுக்கு வருகிறது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பது எந்தளவு தூரம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை கோடிகாட்டியிருந்தார். அவர் குறிப்பிட்டது இதுதான் - மனித உரிமைகள் பேரவை என்பது ஐக்கிய நாடுகள் சபை இல்லை. அங்கே பொதுச் சபை இருக்கிறது. பாதுகாப்பு பேரவை இருக்கிறது (UN human rights council is not a UN. There is a general assembly. There is Security Council).

உண்மையில், மனித உரிமைகள் பேரவையின் செயற்பாட்டு எல்லை எத்தகைய தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதற்கான பதிலே இது. இதிலிருந்து தமிழர்கள் கண்டடைய வேண்டிய பதில் என்ன? ஏனெனில், மனித உரிமைகள் பேரவையால், வெறுமனே சிபார்சுகளை மட்டுமே வழங்க முடியும். அதற்கு மேல் எதனையும், அதனால் செய்ய முடியாது. ஆனால், அத்தகைய சிபாரிசுகளை பலம் பொருந்திய சக்திகள் தங்களின் நலன்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்தக் கூடிய ஏது நிலை உள்ளது என்பதையும் புறக்கணிக்க இயலாது. இலங்கை விடயத்திலும் இதுதான் நிலைமை.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையினால் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில், பாதுகாப்புப் பேர்வையின் அனுமதியின்றி இலங்கைக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் ஐ.நா.வினால் மேற்கொள்ள முடியாது. இலங்கை விவகாரம் பாதுகாப்புப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுமிடத்து, சீனா அதனை நிராகரிக்கும். எனவே, ஐ.நா.வின் ஊடாக இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்பது ஒரு கனவுலக வாதம்தான். அவ்வாறாயின் இதற்கு அப்பால் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாதா?

நிச்சயமாக முடியும். மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்படும் விசாரணையின் முடிவை பலம்பொருந்திய நாடுகள், தங்களின் நாடாளுமன்றங்களில் சமர்ப்பித்து, இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்த முடியும். வகிக்கும் நாடுகள் தனித்தனியாக தங்களின் நாடாளுமன்றங்களின் ஆதரவுடன் அத்தகைய பொருளாதாரத் தடையை ஏற்படுத்த முடியும்.

ஆனால், இவையெல்லாம் நடைபெறலாம் அல்லது நடைபெறாதும் போகலாம். ஏனெனில், இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் குறித்த நாடுகளின் வெளிவிவகார நலன்களுடன் தொடர்புபட்டவை ஆகும்.

இலங்கையின் மீது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விசாரணை ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. இதன் பொருள் என்ன? ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான அரசின் மீதுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதுதானே! ஆனால், தென் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த இடதுசாரித்துவ அரசியலால் வழிநடாத்தப்படும் நாடென்று கணிக்கப்படும் பொலிவியா, ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு அந்த நாட்டின் உயரிய சமாதான விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. ஒவ்வொரு நாடுகளினதும் நலன்சார் அரசியலுக்கு முன்னால் மனித உரிமை விவகாரம் எவ்வாறு இரண்டாம் பட்சமாகிறது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் மேற்கொள்ளப்படும் விசாரணையின் இறுதி விளைவு எவ்வாறு அமையும் என்பது தற்போதைக்கு ஊகங்களுக்கு உரிய ஒன்று மட்டும்தான். ஏனெனில், இறுதியில் தமிழர் விவகாரம் (மனித உரிமை) என்பது, நலன்சார் அதிகார போட்டியில், ஒரு வெறும் துருப்புச் சீட்டாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு, வீசியெறியப்படும் நிலை உருவாகலாம்.

எனவே, ஊகங்களுக்கு உட்பட்ட ஒன்றின் மீது தமிழர்கள் எத்தகைய நம்பிக்கையை வளர்த்துச் செல்ல முடியும்?

---

பகுதியில் தமிழ் வர்த்தகர்களின் [illegible]டகளைச் சூறையாடிய ஐ.தே.க. காடையர் குழுக்களுக்கு பிரேமதாசவும் ரணிலும் தான் பொறுப்பாக இருந்தவர்கள் என்ற பேச்சு பரவலாக உண்டு. அதுபற்றி பின்னர் ஒருமுறை பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த ரணில், “சில்லறை வர்த்தகத்தில் தமிழர்கள் போட்டியிட்டதால்தான் சிங்களவர்கள் தமிழர்களின் கடைகளைச் சூறையாடினார்கள்” என நியாயப்படுத்தினார்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட நல்லதொரு தீர்வுப் பொதியை ஐ.தே.க எம்.பிக்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயே தீ வைத்து எரித்த போது ரணில் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்ததை தொலைக்காட்சிகள் எல்லாம் ஒளிபரப்பின. அந்தத் தீர்வுத் திட்டத்தை ஐ.தே.க. ஏன் எதிர்த்தது என விளக்கம் கொடுத்த ரணில், “அது தமிழர்களுக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்ததுதான் காரணம்” என்றார்.

“இப்படியான ரணில் போன்றவர்களைத் தவிர்த்துவிட்டு இன்றைய அரச தலைவர்களையும் முன்னைய அரச தலைவர் சந்திரிகாவையும் மட்டுமே உருத்திரகுமாரன் போர்க் குற்றவாளிகளாக அறிவித்திருக்கிறார்.

நல்லது உருத்திரகுமாரன் அவர்களே! நீங்கள் வெளிப்படையாக உங்கள் சக[illegible] யார்? எதிரிகள் யார்? என்பதை இனம் காட்டியதற்காக!

(வானவில் 41 இதழிலிருந்து)

---

# காதல் பயிர் வளர...

நமது சமூகத்தில் முன்னெல்லாம் ஏக குடும்ப முறை நிலைபெற்றிருந்தது. இந்த முறையில் இளந் தம்பதிகளுக்குள் காதல் வளர்வதற்கு இடமிருந்தது. இதற்கு ஒரு பழைய கதை.

ஒரு பையனுக்குக் கல்யாணம் ஆயிற்று. மனைவி வீட்டுக்கு வந்தாள். ஆயினும் தாயா்ரிடம் அவனுக்கு இருந்த பயபக்தியினால் மனைவியுடன் பேசுவதற்குக் கூட துணிச்சல் ஏற்படுவதில்லை. இப்படிப் பல தினங்கள் கழிந்தன. ஒருநாள் இரவு பையன் சற்று நேரம் கழித்து வீட்டிற்கு வந்தான். தாயாருக்கு உடம்பு தாளவில்லை. படுத்துக்கொண்டு விட்டாள். “அப்பா, குதிர் இடுக்கில் சாப்பாடு எடுத்து வைத்திருக்கிறேன். அவளையே போடச் சொல்லிச் சாப்பிடு” என்றாள். பையன் கிராக்கி பண்ணிக் கொண்டான். “உன் கையால் போட்டால்தான் அம்மா, எனக்கு வயிறு நிறைந்தாற்போல் இருக்கும்” என்றான். “இல்லையடா, அப்பா! இன்று ஒருநாள் அவள் போடட்டும், நாளைக்கெல்லாம் நான் போடுகிறேன்” என்றாள் அம்மாக்காரி.

சமையலறைக்குச் சென்று இலையில் உட்கார்ந்தான். எத்தனை நாளைய மனோரதம் இன்று நிறைவேறுகிறது? அதை நன்கு 'அனுபவிக்க வேண்டாமா? “சோற்றைக் கையிலேயே போட்டு விடு” என்றான். மனைவி, ஈயச்சட்டியில் மாமியார் எடுத்து வைத்திருந்த பழைய சோற்றைக் கொண்டு வந்து பிடிபிடியாய் எடுத்து உள்ளங்கையில் போட்டாள். ஒவ்வொரு பிடியுடனும் அவன் மனைவியின் முகத்தின் அழகையும் சேர்த்துப் பருகினான். வழக்கத்தைவிட இரண்டு மடங்கு அதிகம் சாப்பிட்டான். ஈயச் சட்டி காலியாகி விட்டது.

மறுநாள் காலையில் தாயார் எழுந்து எருமை மாட்டுக்குப் பருத்திக்கொட்டை ஊற வைத்திருந்த ஈயச் சட்டியை எடுத்தாள். அது காலியாக இருக்கவே திடுக்கிட்டாள். இன்னொரு ஈயச் சட்டியைப் பார்த்தாள். அதில் சோறு அப்படியே இருந்தது! கணவனைத் தனியாகக் கண்ட மகிழ்ச்சியில் அந்த இளம் மனைவி பழைய சோற்றை வைத்திருந்த சட்டிக்குப் பதிலாகப் பருத்திக்கொட்டைச் சட்டியைக் கொண்டு வந்து விட்டாள்! அதே சந்தோஷத்தில் பையனும் மனைவியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவ்வளவு பருத்திக் கொட்டையையும் சாப்பிட்டிருக்கிறான்!


“காதலனும் காதலியும் அடிக்கடி தூர இருந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். ஆனால் நெருங்கிப் பழகவோ, பேசவோ அதிக சந்தர்ப்பம் ஏற்படக்கூடாது. இப்படிப்பட்ட நிலைமையில்தான் காதல் பயிர் அதி துரிதமாக வளரும்” என்பது மனோதத்துவ சாஸ்திரிகளின் சமீபத்திய ஆராய்ச்சி முடிவு.

இப்படிப்பட்ட நிலைமை நம் நாட்டில் ஏக குடும்ப ஏற்பாட்டில்தான் இருந்து வந்திருக்கிறது.


(‘கலியாணம்’ என்ற கட்டுரையில் கல்கி).







இங்கிலாந்தின் ரோம் ஹெட்டிலிருந்து தென் மேற்கில் 14 கிலோ மீற்றர் தொலைவில் நடுக்கடலில் அமிழ்ந்துள்ள எட்டிசன் பாறைகளின் மேல் உருவாக்கப்பட்ட கலங்கரை விளக்கம் இது. இந்தப் படத்தில் முழுமையாக இருக்கும் கலங்கரை விளக்கம் நான்காவது முறையாகக் கட்டப்பட்டது. அருகில் பாதி சிதைந்த நிலையில் இருப்பது இதற்கு முன்னதாக அமைக்கப்பட்டிருந்த மூன்றாவது கலங்கரை விளக்கம்.




# கலங்கரை விளக்கங்களை கண்டுகொள்வோமா?




எதற்காக இந்தக் கலங்கரை விளக்கங்கள்? கடலில் செல்லும் கப்பல்களுக்கு, கரை எங்கேயிருக்கிறது? பாதுகாப்பான துறைமுகம் எங்கே இருக்கிறது? ஆபத்தான இடங்கள் எவை? பவளப்பாறைகள் இருக்கின்றனவா? என்பதையெல்லாம் தெரியப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டவைதான் இவை.வரலாற்றில் நிலைத்து நிற்கும் கலங்கரை விளக்கம் இது தான். எகிப்தின் புகழ்பெற்ற இந்த அலெக் சாண்டிரியா கலங்கரை விளக்கம் பாரோஸ் தீவில் உருவாக்கப்பட்டது. 400 அடிக்கும் அதிகமான உயரத்துடன் கி.மு.280-இல் இந்த கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. இது பண்டைய உலக அதிசயங்களுள் ஒன்றாக வரலாற்றாளர்களால் குறிக்கப்பட்டுள்ளது.



பின்லாந்து நாட்டில் 1909 ஆம் ஆண்டில் வெவ்வேறு வடிவங்களில் இருந்த கலங்கரை விளக்கங்களின் வரைபடம் இது





இந்த பிரஸ்னல் ஆடியில் [லென்ஸ்] இவ்வாறுதான் ஒளி குவிக்கப்பட்டு பரப்பப்படு கிறது.

1800 களின் மத்தியில் உலகின் பல்வேறு இடங் களில் அமைக்கப்பட்டி ருந்த கலங்கரை விளக் கத்தின் விளக்கு அறை யின் மாதிரி வடிவம்

## கொஞ்சம் சிரியுங்கள்

ஆசிரியர்: டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கிட்டு வரச்சொன்னேனே வாங்கிட்டு வந்தியா?

மாணவன்: கேட்டேன் சார், அது அவர் படிச்சு வாங்கின சர்ட்டிபிகேட்டாம் தர முடியாதுன்னு சொல்லிட்டாரு!

ஆசிரியர்: ஏண்டா... என்னிடம் இப்படிப் பொய் பேசுறே?

மாணவன்: உங்களைப் பார்த்ததும் மெய் மறந்து போயிடுறேன் சார், அதான்!

## கதை கேளு! கணக்குப் போடு!!

தாத்தா!.... பிரியாவிடையில் எங்கள் வகுப்பு மாணவி களின் நினைவாக வகுப்பாசிரியருக்கு நினைவுப் பொரு ளினை வாங்கிக் கொடுக்க நினைத்துள்ளோம். 10 ரூபாய் கொடுங்கள் தாத்தா என்றாள் லாவண்யா.மாணவர்களிடம் 20 ரூபாயும், மாணவிகளிடம் 10 ரூபாயும் வசூல் செய்யப் போகிறோம். எங்கள் வகுப்பில் மொத்தம் 50 பேர். 780 ரூபாய் வசூலாகும், இதில் ஆசிரியருக்கு நல்ல நினைவுப் பரிசினை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றாள்.

10 ரூபாயை எடுத்து லாவண்யாவிடம் கொடுத்த தாத்தா, உங்கள் வகுப்பில் இத்தனை மாணவர்கள் இத்தனை மாணவிகள்தானே என்றார். எப்படித் தாத்தா இவ்வளவு சரியாகச் சொன்னீர்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் லாவண்யா. நீ சொன்ன விவரத்தை வைத்துத்தான் சொன் னேன் என்றார் தாத்தா.லாவண்யாவின் வகுப்பிலுள்ள மாணவ மாணவிகளின் எண்ணிக்கையினை நீங்களும் கண்டுபிடியுங்களேன்..

விடை

$10x = 780 - 500 = 280$

$10x = 280$

மாணவர்கள்-28 மாணவிகள்-22

## அறிவுலக மேதை சாக்ரடீஸ்

அறிவுலக மேதை சாக்ரடீஸ் மரண தண்டனை பெற்று, மறுநாள் தண்டனைக்குரிய நாள். அன்றைய இரவே அவரது கடைசி இரவு. அப்படி ஒரு சூழ்நிலையில், சிறையின் மங்கிய வெளிச்சத்தில் எந்தவிதக் கவலையுமின்றிப் படித்துக் கொண்டிருந்தார். அங்கே இருந்த சிறைக் காவலர் சாக்ரடீசின் அருகில் வந்தார். உங்களுக்கு நாளை மரண தண்டனை நிறைவேற்றப் போகிறார்கள். இறப்பினைப்பற்றிய கவலையின்றிப் படித்துக் கொண்டிருக்கிறீர்களே என்றார்.

அதற்கு அறிவுலக மேதை, ஆம், நான் இறப்பதற்கு ஒரு நாள்தான் உள்ளது. அதற்குள் படித்தாக வேண்டும் என்று படிக்கிறேன். இறந்துபோனால் மீண்டும் இந்த நூலைப் படிக்க முடியாதல்லவா? என்றாராம்.

## விடுகதைகள்

- இருவர்க்கு, மேலும் இருவர் துணை. அவர்கள் யார்?
- ஒரு வாய் தண்ணீரைச் சுமந்தபடி உயரத்தில் நிற்கிறான். அவன் யார்?
- வாரி வாரி வழங்குவான் வெளிச்சம், அதை வாங்கத்தான் ஆளில்லை. அவன் யார்?
- மண்ணுக்குள் இருப்பான் குழம்பிலும் மணப்பான். அவன் யார்?
- வருவான் போவான், வருவது தெரியும் பார்க்கத்தான் முடியாது. அவன் யார்?
- ஆயிரம் கண் உண்டு, அசந்து தூங்க இடம் உண்டு. அது என்ன?
- மூன்று கோடுள்ளவன், அழகு வாலுள்ளவன், பழத்துக்கு மட்டும் எதிரி. அவன் யார்?
- கைக்குப் பூசினால் கல்யாண வீடு, உடம்புக்குப் பூசினால் குளிர்ச்சி. அது என்ன?
- தண்ணீருக்குள் வந்தவனைத் தண்ணீரிலேயே கரைத்தார்கள். அவன் யார்?
- புள்ளிகளைச் சுமந்தபடி புல்வெளியில் நடமாடுவான். அவன் யார்?

விடைகள் :

| | |
|---|---|
| கண் - கண்ணாடி | தென்னைமரம் |
| மின்னல் | மஞ்சள் |
| காற்று | நார்க்கட்டில் |
| அணில் | சந்தனம் |
| உப்பு | மான் |



திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவத்தலைவர்களுக்கான சின்னம் சூட்டும்விழாவில் சின்னம் சூட்டப்பட்ட மாணவத்தலைவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதைக் காணலாம். (63)

# மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த கூட்டுறவு மிக முக்கியமானதாகும்

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கூட்டுறவு தினத்தைக்கொண்டாடுவ தன் நோக்கம் கூட்டுறவு பற்றிய அறிவை மேம்படுத்துவது, சர்வதேச ரீதியாக கூட்டுறவுகளின் அனுகூலமான அண்மித்த உறவுகளைப் பலப்படுத்துவது அத்துடன் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் போன்ற பல விடயங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்தார்.

கூட்டுறவு ஆய்வு மாநாடு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கூட்டுறவு வியாபார முயற்சிகள் சகலருக்கும் தொடர்ந்திருக்கத்தக்கதான அபிவிருத்தியை ஏற்படுத்தும் என்பதே உலக ரீதியான இவ் வருடத்தின் கருப்பொருளாகும் எங்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவு பற்றி ஆய்வு செய்யும் ஒரு தினமாக நாங்கள் இத்தினத்தை ஆக்கியுள்ளோம். கூட்டுறவு, இயக்கத்தின் மிக முக்கிய குறிக்கோள்களில் ஒன்று சமூகக் கரிசனையாகும். இந்த விதத்தில் மக்களுக்குத் தொடர்ந்திருக்கத்தக்க நற்சேவைகளைப் புரியும் ஆற்றலைக் கூட்டுறவு கொண்டுள்ளது என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டும் கடப்பாடு எங்களைச் சார்கின்றது.

கூட்டுறவின் அங்கத்தினர்களின் தன்னார்வம், திறந்த உறுப்புரிமை, ஜனநாயக உறுப்பினர் கட்டுப்பாடு, உறுப்பினர் பொருளாதாரப் பங்குபற்றுகை, சுய ஆளுகை, சுயாதீனம் மற்றும் கூட் டுறவுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, சமூக அக்கறை போன்ற அரசியல் உள்ளீடுகளால் பாதிக்கப்படுகின்றன. கூட்டுறவும் சமூக விருத்தியும் எமது மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்குக் கை கொடுத்து உதவ முன்வரவேண்டும்

எமக்குப் பொருளாதார விருத்தி, வேலை வாய்ப்பு, முறையான வளப்பயன்பாடு, சேமிப்பு, வருமானப் பங்கீடு என்று பலதும் தேவைப்படுகின்றன. இவற்றைப் பெற முதலில் நாங்கள் எங்கள் தேவைகளை அடையாளங்காண வேண்டும். அதுவும் போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களின் தேவைப்பாடுகள், எதிர்பார்ப்புக்கள்,

சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களில் தற்போது 259 சங்கங்கள் மட்டுமே நடைமுறையில் இருந்து வருவதாக அறிகின்றேன். மற்றவற்றையும் நாம் திரும்ப உயிர்பெற உதவி செய்ய வேண்டும்.

எமது கூட்டுறவுச் சங்கங்களில் இன்று காணப் பெறும் நடைமுறைச் சிக்கல்கள், மற்றும் சட்டச் சிக்கல்கள் போன்றவற்றைக் களைந்து வடமாகாண கூட்டுறவுத் துறையை முன்னர் இருந்தது போல் சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்காக உங்கள் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவதே கடமையாகும். இதற்கு யாவரதும் ஒத்துழைப்புடன் கூட்டுறவு மூலம் எமது மக்களின் நல்வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்றார். (25)

# வேலணை மத்திய கல்லூரிக்கு இரண்டு காணிகள் அன்பளிப்பு

வேலணை மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்காக பழைய மாணவர் சங்கம் பாடசாலைக்கு அருகில் ஒன்பதரைப்பரப் புடைய இரண்டு காணிகளை கொள்வனவு செய்து பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்சிலிருந்து வருகைதந்த பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு இந்தக் காணிகள் வாங்கப்பட்டுள்ளதாகவும் வெகு விரைவில் இக்காணியில் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படவுள்ளதாகவும் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி மாணவர்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டு செயற்பட்ட பழைய மாணவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

# கலை மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலை போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(அச்சுவேலி)

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றம் கலை பண்பாட்டுப்பெருவிழாவை முன்னிட்டு நடாத்திய பேச்சு, கட்டுரை, ஆக்கத்திறன், சித்திரம் போன்ற போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு.

**மேற்பிரிவு கட்டுரை**

சி.சங்கீதா (புனிததெரேசாள் மகளிர் கல்லூரி), ச. பொன்மாறன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), த.லரணி, ஸ்ரீ.விஸ்ணுஜா (இடைக்காடு மகாவித்தி)

**அதிமேற்பிரிவு கட்டுரை**

க.தர்சிகா (இடைக்காடு மகாவித்தியாலயம்), கு.நிவேதிகா, சி.மேரிதர்மஸ்ரீ, கு.பிரவீனா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி),

**கவிதை மேற்பிரிவு**

செ.வெவோகா, ச.சாருஜா, ர.முகிர்தனா

**அதிமேற்பிரிவு**

ம.கிரிஷாத், த. தீபிகா, செ.தனுசன்

ஆக்கத்திறன் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்கள்

**நீத்துப்பெட்டி இழைத்தல்**

வே.வேதநாயகி, (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) க.கோபினி, ஜெ.பிரிந்தா (இடைக்காடு மகாவித்தியாலம்), ந.நிருபன், பா.நிதர்சன் (அச்சுவேலி மத்திய கல்லூரி)

**கிடுகு பின்னுதல்**

க.சிவானுஜன் (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), யோ.அனுசியன் (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), த.யதுசன்,விதுஷா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), க.பானுஜன் (பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்)

**சித்திரம்**

கு.நேருஜன் (அச்சுவேலி வடக்கு)ம.நிறோஜன் (அச்சுவேலி), க.தமிழ்ச் செல்வன் (பத்தமேனி)

**கிராமிய நடனம்**

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம். (85)

(முற்றும்)

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழில் நாம் கவிதையை உணர்வு ரீதியாய் மட்டுமே புரிந்து கொள்ளலாம் என நினைக்கிறோம். அப்படியும் வாசிக்கலாம். ஆனால் நமக்கு உணர்வு ரீதியாய் ஒன்றாத கவிதைகளும் உள்ளனவே! அவற்றை எப்படி படிப்பது? அது போன்று நமக்கு அந்நியமாய் தோன்றுகிற கவிதைகளை எதிர்கொள்ளும் போது ஒன்றும் புரியவில்லை என ஏமாற்றமடைகிறோம்.

எப்படி தமிழ் சினிமா தொடர்ந்து பார்ப்பவர்களுக்கு பாதியில் ஒரு படத்தை பார்த்தால் கூட கதை புரியுமோ அது போல் கவிதையில் தொழில்நுட்ப பயிற்சி கொண்டோருக்கு கடைசி சில வரிகளை பார்த்து கூட இது என்ன சொல்லுகிறது என ஊகிக்க முடியும். அதன் சில அடிப்படைகளை புரிந்து கொண்டால் கவிதையை, சிக்கலான ஒரு கவிதையை கூட, புரிந்து கொள்வது அவ்வளவு சிரமம் அல்ல. "திருடன் மணியன் பிள்ளை" என்கிற நூலில் மணியன் பிள்ளை சுவாரஸ்யமான ஒரு விசயம் சொல்கிறான். சில வீட்டு ஜன்னல் கம்பிகள் மிக வலுவாக இருக்கும். ஆனால் எவ்வளவு வலுவான கம்பிகளையும் அவற்றின் இடையே அதைவிட கனமுள்ள ஒரு இரும்பு கம்பியால் நுழைத்து ஒரு அழுத்து அழுத்தினால் படக்கென்று வளைந்து விடும். ஒரு திருடனால் உடைக்க முடியாத வீடே இல்லை என்பார். அது போல் சில எளிய தந்திரங்களை அறிந்த ஒரு வாசகனால் புரிந்து கொள்ள முடியாத கவிதையும் இல்லை.

– ஆர்.அபிலாஷ்

மாணிக்கவாசகர், சடகோபாழ்வார் பதிகங்கள் சமயத்தை ஸ்தாபிப்பதற்கான எண்ணத்திலிருந்து உதித்தவை என்று எண்ணுவதைப் போல் தவறு கிடையாது. அகண்ட அறிவில் வாழ்க்கை ரகசியங்களில், அவர்கள் மனம் லயித்தது. அந்த லயிப்பின் முடிவே அவர்களுடைய கவிதை. அது பிற்காலத்தவர்களால் பிரசாரத்திற்காக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கலாம். அதனால் அதைப் பிரசாரத்திற்காகப் பிறந்தது என்று கூறி விட முடியாது.

– புதுமைப்பித்தன்

இன்று கவிதை எழுதுபவர்கள் – இளங்கவிஞர்கள் உட்பட தங்கள் கவிதைகளை ஒரு சுய விமர்சனத்துக்கு உட்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லை. கவிதை என்பது விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு அனுபூதி நிலை என்று நம்புகிறார்கள். ஒரு புதினம் எழுதுவது போல, ஒரு சிறுகதை எழுதுவது போல, ஒரு கவிதையும் எழுதப்படுகிற ஒன்று என்பதை யாரும் இங்கே ஒப்புக்கொள்ள தயாராக இல்லை. கவிதை என்பது ஒரு சன்னதம் என்று பலரும் இங்கே நம்புகிறார்கள்.

முன்னொரு காலத்தில் பாரதிக்கு கவிதை ஒரு சன்னதமாக இருந்தது உண்மைதான். மாலை நேரச் சூரியனை பார்த்ததும் தனது நெஞ்செலும்பை நிமிர்த்தி நின்று தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதம் எனும் பாட்டை ஓங்கிக் குரலெழுப்பிப் பாடிவிட்டு மூர்ச்சையாகி விட்டான் பாரதி என்று வ.ரா எழுதி இருக்கிறார். ஆனால் இன்று நிலைமை வேறு.

– இந்திரன்

சங்கக் கவிதைகளிலிருந்து கவிதை நுணுக்கமும் கூர்மையும் கற்றுக் கொள்ளலாம். காவியங்களிலிருந்து பல வகைப்பட்ட சொல்லும் விதமும், கவிதையை வளர்த்தெடுத்துச் செல்லும் வழிவகையும், விரிவான கதை சொல்லும் முறையும் தெரிந்து கொள்ளலாம். பக்திப் பாடல்களிலிருந்து உணர்ச்சி பாவமும் ஒலிநயமும் எளிமையையும் படித்துக் கொள்ளலாம். சிற்றிலக்கிய வகைகளிலிருந்து வெவ்வேறுபட்ட கவிதையாக்க உத்திகளைப் பயின்று கொள்ளலாம். கவிதைத் தொழில்நுட்பத்திற்கான பயிற்சிகளைப் பெற உதவும் ஆதாரங்கள் இவை.

– விக்ரமாதித்யன்

சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள் எம்அணங்கி யோளே. (குறுந். 119)

எதற்கும் மருளாத காட்டுயானையை வெள்ளைப் பாம்பின் ஒரு சிறிய குட்டி வெருட்டினாற்போல, வெண்பல் வளைக்கை இளையவள் ஒருத்தி என்னை வலுவிழக்கச் செய்தாள்.

இது நேரடி உரை. ஆனால், "கல்லாத ஒருவனை கல்வியின் இளம் மாணாக்கன் ஒருவன் மேம்பட்டாற்போல என் வலிமையைத் தன் இளமையால் தோற்கடித்தாள்" என்பதும் உள்ளுறைகிறது.

– ராஜ சுந்தரராஜன்

# விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் விசாரணை

## - என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் -



விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கு நன்மை ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் விசாரணை நடாத்தப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கிரமமான முறையில் விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமாயின் யுத்தம் இடம்பெற்ற ஒட்டுமொத்த காலத்திலும் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

உள்நோக்கங்களுடன் இலங்கைக்கு எதிராக சில நாடுகள் விசாரணைகளை முடுக்கிவிட முயற்சிப்பதாகவும் அதற்கு அரசாங்கம் இடமளிக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை ஓர் சுயாதீனமான நாடு எனவும் வெளிநாட்டு தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகள் முழுக்க முழுக்க ஒரு தலைப்பட்சமான முறையில் நடைபெறவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஏனைய மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்களே வடமாகாண சபைக்கும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதனை விடுத்து தேசிய பிரச்சினை ஈழ விவகாரங்களில் வடமாகாணசபை கூடுதல் முனைப்புக் காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கரையோர ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது

(பம்பலப்பிட்டி)

பம்பலப்பிட்டியில் தடம்புரண்ட மூன்று ரயில் பெட்டிகளையும் தண்டவாளத்தில் நிறுததும பணிகள் நிறைவுபெற்றுள்ளன. மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலின் பெட்டிகளே நேற்று முன்தினம் தடம்புரண்டிருந்தன.

ரயில் தடம்புரண்டமையால் சேதமடைந்த ரயில் பாதையை சீரமைக்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.இதேவேளை, அனுராதபுரம். பரசன்கஸ்வெவ பகுதியில் தடம்புரண்ட ரயிலை தண்டவாளத்தில் நிறுத்தும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று முற்பகல் ரயில் தடம்புரண்டமையால் வடக்குமார்க்கத்திலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.எவ்வாறாயினும் ஒருவழித் தடத்தில் வடபகுதிக்கான ரயில் போக்குவரத்து முன்னெடுக்கப்படுகிறது.

# ரம்போசாவின் நேரத்தை வீணடிக்கிறது அரசு

## - குற்றம் சுமத்துகிறது ஐ.தே.க. -



சிறுபான்மை தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க தயாராகயில்லாத அரசாங்கம் தென்னாபிரிக்காவின் பிரதி ஜனாதிபதி சிறில் ரம்போசாவின பெறுமதிமிக்க நேரத்தை வீணடிக்கின்றது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கம் தனது கட்சியிலுள்ள சிங்களக் கடும் போக்குவாதிகளுடன் , தமிழர்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளப்போவதில்லை என ஏற்கனவே ஒப்பந்தம் செய்துவிட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். விமல் வீரவன்ஸ தனது கட்சி சார்பாக ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த 12 கோரிக்கைகளில் தென்னாபிரிக்க மத்தியஸ்தத்தை ஏற்கக் கூடாது என்பதும் ஒன்று எனவும் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

# மேல்மாகாண சபைக்கு 15 மாடிக்கட்டடம்

(கொழும்பு)

மேல் மாகாண சபைக்கு 15 மாடிகளைக் கொண்ட புதிய அலுவலகக் கட்டடத் தொகுதி ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த புதிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதன் மூலம் ஒரே கூரையின் கீழ் அனைத்து அலுவலகங்களையும் சேர்த்து, பொதுமக்களுக்கு விரைவாக பணியாற்ற முடியும் என மேல் மாகாண சபையின் செயலாளர் ஜயந்தி விஜேதுங்க குறிப்பிட்டார்.

உத்தேச புதிய கட்டடமானது 15 மாடிகளைக் கொண்டு அமைக்கப்படவுள்ளதாகவும் அதற்காக ரூபா 4800 மில்லியன் செலவாவதாகவும் மூன்று ஆண்டுகளுக்குள் அது பூர்த்தியடையும் எனவும் செயலாளர் ஜயந்தி விஜேதுங்க தெரிவித்தார்.

மேல் மாகாண சபைக்குச் சொந்தமான முதல் தர அலுவலகங்கள் பல தற்போது வாடகை அடிப்படையில் நடாத்தப்பட்டு வருவதாகவும், இதற்காக வருடாந்தம் ரூபா 300 மில்லியன் பணத்தை மேல் மாகாண செலவிடப்படுவதாக செயலாளர் ஜயந்தி விஜேதுங்க மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம்கள் மீதான வன்முறையை பௌத்தர்கள் நிறுத்த வேண்டும்

## - தலாய்லாமா கோரிக்கை -

இலங்கையிலும் மியன்மாரிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க வேண்டும் என்று திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா கோரியுள்ளார்.

தமது 79ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்றுமுன் தினம் அவர் ஆற்றிய உரையிலேயே இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.

இந்திய காஷ்மீரில் உள்ள இடம ஒன்றில் வைத்து ஆயிரக்கணக்கான தமது ஆதரவாளர்கள் மத்தியில் தலாய்லாமா உரையாற்றினார். இலங்கையில் பௌத்தர்கள், முஸ்லிம் சிறுபான்மையினர் இலக்கு வைத்து தாக்குதல் நடாத்துகின்றமையானது ஏற்கததக்கதல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

புத்தபகவானின் சிலைக்கு முன்னால் நின்று பௌத்தர்கள் இந்த வன்முறைகளை மேற்கொள்வதைப் போன்ற தோற்றத்தை நினைத்துப் பார்க்க வேண்டும் என்று தலாய் லாமா குறிப்பிட்டார்.

# ஊவாமாகாண சபையை கலைப்பதற்கு நடவடிக்கை

கதிர்காம திருத்தலத்தின் எசல ஊர்வலம் நிறைவடைந்த பின்னர் ஊவா மாகாண சபையை கலைப்பதற்கு பெரும்பாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி பெரும்பாலும் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு பின்னர் ஊவா மாகாணசபை கலைக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆன்மீக நிகழ்வு இடம்பெறவுள்ள தருணத்தில் மாகாணசபையை கலைப்பது உகந்த விடயம் அல்ல என கருத் தில் கொள்ளப்பட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் எசல ஊர்வலம் எதிர்வரும் 12 ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இறுதி மகா ஊர்வலம் வீதிகளில் சஞ்சரிக்கவுள்ள நிலையில் 13 ஆம் திகதி மாணிக்ககங்கையில் நீர்வெட்டும் இடம்பெறவுள்ளது.

# வாடகை முச்சக்கரவண்டியில் மாணவர்கள் காதல் லீலை

முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட குற்றச்சாட்டின் பேரில் பாடசாலை மாணவர்கள் அறுவர் உட்பட முச்சக்கர வண்டி சாரதியும் கடந்த ஞாயிறன்று கைது செய்துள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த முச்சக்கர வண்டியினையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீர்கொழும்பு கல்விக் கோட்டத்தில் உள்ள இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த 15 மற்றும் 16 வயதுகளையுடைய மூன்று ஜோடி மாணவர்களே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடோல்கலே பிரதேசத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் முச்சக்கர வண்டியில் வைத்து ஜோடியாக இருந்து காதல் லீலையில் ஈடுபட்டுள்ள போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் குறித்த முச்சக்கர வண்டியை ஒரு மணித்தியாலத்திற்கு 300 ரூபா வாடகைக்கு அமர்த்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் அறநெறி பாடசாலைக்குச் செல்வதாக வீட்டாரிடம் தெரிவித்து விட்டு வந்து காதல் லீலையில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# புதியவீதி சமிக்ஞைகள் விரைவில் அறிமுகம்

போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக இதுவரை பயன்படுத்தப்படாத புதிய வீதி சமிஞ்ஞைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய சமிஞ்ஞைகள் மற்றும் பழைய சமிஞ்ஞைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் எச்.எஸ்.ஹரிச்சந்திர தெரிவித்தார்.

குறித்த வர்த்தமானியின் அடிப்படையில், 215 வீதி சமிஞ்ஞைகள் பயன்பாட்டிற்கு வரும் என அவர் குறிப்பிட்டார். அதிவேக வீதிகளில் பயன்படுத்தப்படும் சமிஞ்ஞைகளும், அபாயகர மருந்துகளை கொண்டு செல்லும் போது பயன்படுத்தப்படும் சமிஞ்ஞைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் வீதி சமிஞ்ஞை அறிவித்தல்கள் வெண்ணிறத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. மஞ்சள் நிறத்திலான சமிஞ்ஞைகள் சாரதிகளால் துரிதமாக இனங்கண்டு கொள்ள முடியாமையே இதற்கான காரணமாகும்.

புதிய சமிஞ்ஞைகள் வர்த்தமானியின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் சாரதி பயிற்சி நூல்களிலும் அவை பிரசுரிக்கப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் எச்.எஸ்.ஹரிச்சந்திர தெரிவித்தார்.



**தேசிய விஞ்ஞான டிப்ளோமா போதனாசிரியர்கள் 2808 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது.**


# பருப்பின் பாவனை அதிக்ரிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் மத்தியில் அசாதாரணமான வகையில் பிரதான உணவுப் பொருளான பருப்பின் பாவனை அதிகரித்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆய்வு மற்றும் பயிற்சி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.சந்தையில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக நுகர்வோர் மாற்றீடாக பருப்பு வகைகளை தெரிவு செய்துள்ளதாக பயிற்சி நிலையத்தின் அதிகாரி துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.


கரட், போன்சி, பீற்ரூட், வட்டுக்காய், மற்றும் தக்காளி போன்ற மரக்கறிகளின் விலைகள் கடந்தவாரத்தில் கிலோ ஒன்று 100 ரூபா முதல் 150 ரூபா வரை அதிகரித்திருந்தன.

26)




(..............)

27)




(..............)


28) பாதை ஒன்றை அமைப்பதற்கு 8 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை. என கணக்கிடப்பட்டது. இதே வேலையை 5 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பார்?


1. 10  2. 16  3. 20

29) கமலன் வரிசை ஒன்றில் முன்னாலிருந்து ஆறாவதாகவும் பின்னாலிருந்து எட்டாவதாகவும் நிற்கின்றான். எனின் வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 12  2. 13  3. 10

30) உருக்களுக்குச் சமமான வகையில் எழுத்துக்கள் அதன் கீழ் தரப்பட்டுள்ளது.





 என்னும் குறியீடு குறிக்கும் பெயர்?

1. இலங்கை  2. நங்கை  3. இலக்கு

31)  என்னும் குறியீடு குறிக்கும் பெயர்?

1. தங்கை  2. மங்கை  3. நங்கை

32) "தங்கை" என்ற சொல்லைக் குறிக்கும் குறியீடு எது?



33) ஒரு பண்ணையில் மாடுகளும் கோழிகளுமாகச் சேர்த்து 16 உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 56 ஆகும். ஆகவே பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?

1. 4  2. 12  3. 14

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1) கீழ் உள்ள சொற்களுடன் பெரும்பாலும் தொடர்புடைய உருவைத் தெரிவு செய்து கோடிடுக.

1- வீடு
2- விலங்கு
3- நன்றி, விசுவாசம்
4- அதிக மோப்பசக்தி





1. 2. 3.

2) 0.25, 0.75, 0.2, 0.5, 1.25 போன்றவற்றை ஏறுவரிசைப்படுத்தினால் வருவது

1). 1.25, 0.75, 0.25, 0.5, 0.2
2). 0.2, 0.5, 0.25, 1.25, 0.75
3). 0.2, 0.5, 0.25, 0.75, 1.25


3) தரப்பட்ட இவ் உருக்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்தால் கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.






1 2 3

4)




1. 14  2. 12  3. 10

**பின்வரும் படங்களின் உதவியுடன் 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




5) ஒரு அன்னாசியின் விலை யாது?

1. ரூ 60  2. ரூ 90  3. ரூ 100


6) மூன்று அப்பிள்களினதும் மூன்று அன்னாசியினதும் விலை யாது?

1. ரூ 300  2. ரூ 315  4. ரூ 30


R L 5 1 L 2 M A 2 5 1 0 2 A L
C 7 8 1 L S 6 8 L 2 T 8 2 S

7) அதிகளவில் எழுதப்பட்ட இலக்கம் எது?
1. 8 2. 1 3. 2

8. அதிகளவில் எழுதப்பட்ட ஆங்கில எழுத்து எது?
1. L 2. S 3. A


9)  ..............................

அடுத்து வரும் உரு யாது?




10) தற்போது சுதனின் வயது 12 ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். சுதனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இருமடங்காக இரக்கும்?
1. 2 2. 5 3. 6


11) 5600 ரூபாவின் $^3/_8$ ஐ சுரேஸ் செலவு செய்தான். மீதியை தங்கைக்குக் கொடுத்தான். அவன் தங்கைக்குக் கொடுத்த பணம் எவ்வளவு?
1. ரூ 1400 2. ரூ 3500 3. ரூ 2000

12) 


இவ்வுருவின் சுற்றளவு எது?
1. 22 m 2. 28 m 3. 15 m


13) 


எறும்பு ஒன்று இவ்வட்டக்கம்பிச் சட்டத்தைச் சுற்றி இரண்டு முறை பயணம் செய்தால் அது பயணஞ் செய்த தூரம் 48 cm ஆகும். அதன் படி உருவில் காட்டப்பட்ட "X" இன் தூரம் யாது?
1. 6cm 2. 16cm 3. 32cm

14) 

இச்சதுரவடிவ காட்போட் அட்டையில் நிழற்றிய அளவுபோன்று எத்தனை முக்கோண வடிவங்கள் வெட்டி எடுக்கலாம்?
1. 24 2. 16 3. 32






15) XY இரேகை 20 சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன PQ இன் நீளம் 18 CM எனின் XY இன் நீளம் யாது?
1. 40 Cm 2. 80 Cm 3. 60 Cm

**ரமணியின் தாயின் பெயர் விமலா, தகப்பனின் பெயர் சுதாகர் தீபன் விமலாவின் சகோதரன். தீபனுக்கு சுமதி, ஜோன் என்னும் இரு பிள்ளைகள் உள்ளனர்.**

16) ஜோன் ரமணிக்கு என்ன உறவு முறை
1. மாமா 2. சகோதரன் 3.மச்சான்

17) விமலா சுமதிக்கு என்ன உறவு முறை
1. மருமகன் 2. பேத்தி 3. மாமி

18) பழமொழிக்குரிய கருத்திலை தெரிவு செய்க. "வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்"
1. ஒரு வேலையைச் செய்யத் தொடங்க முன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளல்.
2. ஒன்றை செய்ய முன் அதற்கான பலனை எதிர்பார்த்தல்.
3. நஷ்டம் ஏற்படாத வேலைகளில் ஈடுபடுதல்.

19) "வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்"
1. திறமையானவன் புல்லை ஆயுதமாகப்பயன்படுத்துவான்.
2. வல்லவனுக்கு முன்னால் புல் ஆயுதமாக மாறிவிடும்.
3. திறமையானவன் எதையும் சாதிப்பான்.

**பொருத்தமான சொற்களைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

20) பசு : கன்று போல சிங்கம் : ....................................
1. குட்டி 2. குருளை 3. பிள்ளை

21) சோறு : பசி போல நீர் : ....................................
1. போத்தல் 2. கிணறு 3. தாகம்


22) விளக்கு : வெளிச்சம் போல கல்வி : ....................................
1. பணம் 2. அறிவு 3. புத்தகம்

**23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கான மிகச் சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் இடுக.**

23) நாம் அதிக நேரம் புத்தகங்கள் வாசிக்க வேண்டும். எனக் கூறப்படுவதற்கான காரணம்.
1. நாம் புதிய புதிய தகவல்களையும் அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.
2. நாம் எழுத்துக்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்.
(...............)

24) நாம் நீரை சுடவைத்துப் பருக வேண்டும் எனக் கூறப்படுவதற்கான காரணம்.
1. சுடவைக்கப்பட்ட நீர் சுவையானது என்பதாகும்.
2. நீரினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்காகும்.
(...............)

**எண்கோலங்களை இனங்கண்டு உரிய இடத்தில் வரவேண்டிய எண்ணை அடைப்புக்குள் எழுதுக.**

25) 

(..........

# சிறுவர்களுக்கான சாகசப் பூங்கா பொறுப்புடன் பாதுகாக்க வேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு



சிறுவர்களது பொழுது போக்கு மையமாக மாற்றியமைக்கப்பட்டுள்ள பழைய பூங்காவின சாகசப் பூங்காவை அனைத்துத் தரப்பினரும் பொறுப் புணர்வுடன் பாதுகாத்து பராமரிக்க வேண்டுமென யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் சிறார்களுக்காக நவீன வடிவமைப்புக்களுடன் நிர்மாணிக்கப்பட்ட சாகசப் பூங்காவை நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னொருகாலத்தில் இந்தப் பூங்கா வேறுதேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் சந்திரசிறியும் இப்பகுதியை எவ்வாறு சிறுவர்களின் பொழுது போக்கு மையமாக மாற்றியமைக்க முடியும் என்பது குறித்து ஆராயத் தொடங்கினார்கள்.

இதன்பிரகாரம், ஆரம்ப கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது பத்திரிகைகளில் உண்மைக்குப்புறம்பான செய்திகள் பல பிரசுரிக்கப்பட்டன.

இருந்தபோதிலும் இன்று சிறார்களினதும் பெரியோர்களினதும் மனரம்மியமான சூழலாக இப்பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன்னைய பழைய பூங்காவானது தற்போது சிறுவர்களுக்கான சாகசப் பூங்காவாக மாற்றப்பட்டுள்ளது.

எனவே, இதனை உணர்ந்து அனைவரும் பொறுப்புணர்வுடன பாதுகாத்து பராமரிக்க வேண்டுமென்பதுடன் இதன் மூலம் ஒவ்வொருவரும் மனதையும் உடலையும் ஸ்திரப்படுத்த முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

முன்பதாக, சிறார்களின் இசை அணிவகுப்புடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதான வாயிலில் வரவேற்கப்பட்டதை அடுத்து மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் வடகக்கு மாகாண சபையின் செயலராளர் உள்ளிட்ட துறை சார்ந்த பலர் கலந்து கொண்டனர்.



யாழ். கச்சேரி பாரதி வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றது. மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத இவ் வீதியை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய நெல்சிப் திட்டத்தின் கீழ் இவ்வீதி பூரணமாக செப்பனிடப்பட்டு வருகின்றது. இப்பணிகளை யாழ். மாநகரசபை முன்னாள் உதவி முதல்வர் துரைராசா இளங்கோ (றீகன்) அவதானித்து வருகின்றார். (இ)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

பிறந்த ஆண்டு :- ..................................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


## கும்பாபிஷேகம்

ஆவரங்கால் மேற்கு சர்வோதயா வீதியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி முற்பகல் 11.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல்நாள் 13 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். கிரியா காலங்களில் வருகை தரும் பக்தர்கள் பால், தயிர், இளநீர், பூ, பூமாலை போன்ற திரவியங்களை வழங்கி வைரவப்பெருமானின் அருளைப் பெறுமாறு அழைக்கப்படுகின்றனர். (85)

# நகரப்பகுதியில் எரியூட்டப்படும் குப்பைக் கழிவுகளால் சீர்கேடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக நகரப்பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைக் கழிவுகள் நகரப்பகுதியிலுள்ள சேமக் காலையொன்றின் பின்புறத்தில் கொட்டப்பட்டு எரியூட்டப்படுவதால், சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன் பொதுமக்களும் இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பொதுமக்களின் வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் வீதியோரங்களில் கொட்டப்படும் குப்பைகள் என்பன மன்னார் நகரசபையினால் அள்ளப்பட்டு குறித்த சேமக் காலையின் பின்புறத்தில் கொட்டப்படுவதாகவும், குப்பைகள் சேகரிக்கப்பட்ட பின்னரே எரி யூட்டப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் இது தொடர்பில் முன்னர் நகரசபையிடம் தாம் குப்பைகளை இவ்விடத்தில் கொட்டவேண்டாம் எனவும், இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதாகவும் குப்பை கொட்டுவதற்கென தனியான இடத்தை அமைக்குமாறும் கோரியிருந்த நிலையில் நகரசபை 5 ஆம் கட்டைப் பகுதியில் கொட்டுவதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்ததாகவும், எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே, இப்பகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு குப்பைகளைக் கொட்டுவதற்கு மாற்று இடத்தை ஏற்படுத்த நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்களால் போற்றப்படுபவர் சுவாமி சித்ரூபானந்தா



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் வணக்கத்திற்குரிய சுவாமி சித்ரூபானந்தா இவ் உலகைவிட்டுப் பிரிந்து இறைவனுடன் கலந்து இரண்டு மாதங்களாகி விட்டன.

மிக ஒளி நிறைந்த நன்நாளான சித்திரைப் பூரணை தினத்திலே சேவாச்சிரமத்தில் பூரணை ஆராதனை முடிதது ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கும் போது எம்பெருமான் அவரைத் தன்னுடன இணைத்துக் கொண்டது மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

சுவாமியின் சேவைகளைப் பெற்றவர்கள் இன்று கதிகலங்கி நிற்கின்றனர். சுவாமிகளின் சமய, சமூக, ஆன்மீக சேவைகள் காலத்தால் அழியாப் புகழ் கொண்டவை. துறவுபூண்ட சுவாமிகள் கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்ற கீதோபதேசத்திற்கமைய சமய, சமூக, ஆன்மீகப் பணிகளை ஆற்றி வந்தார். இவரிடம் இனமொழி, சமய அரசியல் வேறுபாடுகள் எப்போதும் இருந்ததில்லை. அனைவரையும ஒன்றாக நோக்கும் சிந்தை கொண்டவர்.

சுவாமிகளின் தந்தையார் இராமலிங்கம் இளையதம்பி, தாயார் இரத்தினசிங்கம் சரஸ்வதி தந்தையார் அரச திணைக்களமொன்றில் பணியாற்றி கொழும்பில் வசித்து வந்தபோது 1937 ஆம் ஆண்டு சுவாமிகள் அவதரித்தார்.

சுவாமிகளுக்குப் பெற்றோர் சூட்டிய நாமம் இரத்தினசபாபதி. கொழும்பில் பிறந்த அவர் அங்கே மிகச் சொற்ப காலம் கல்விகற்று பின்னர் பருத்தித்துறைக்கு வந்து பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியும் பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று இவர் ஆங்கிலத்தில் மிகப் புலமை பெற்றவராக விளங்கி னார்.

இது அவரின் சேவைகளுக்கு மேலும் மெருகூட்டியது. முதன் முதலில் பருத்தித்துறையில் சிறு குடிசையமைத்து ஆன்மீகப் பணியை ஆரம்பித்தார். அவருக்கு பிரதேச மக்களின் பேராதரவு இருந்துவந்தது. சமூக வள்ளல் பருத்தித்துறை தொழிலதிபரும் புகைப்படக்கலைஞருமான அரியகுட்டி நாகரத்தினத்தால் (குகன்) பருத்தித்துறை சவனாய பிரதேசத்தில் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டு அங்கு சேவாச்சிரமம் செயற் படத் தொடங்கியது. அப்போது அவர் பிறதர் இரத்தினசபாபதி என்னும் பெயருடன் ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டிருந்தார்.

பின்னர் வடஇந்தியா சென்று இராமகிருஸ்ண மடாலயத்தில் ஆன்மீகப் பயிற்சிகளைப் பெற்ற சுவாமி சித்ரூபானந்தா என்னும் பெயருடன் இலங்கை திரும்பி இறக்கும்வரை சிறந்த சமூக சமய ஆன்மீகப் பணிகளையாற்றியுள்ளார்.

ஆரம்பகாலத்தில் 4 வருடங்கள் சேவாச்சிரமத்தின் செயலாளராகப் பணியாற்ற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையால் சுவாமிகளின் சமய, சமூக, ஆன்மீகப் பணிகள் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவற்ற குடும்பங்களுக்கும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் மீள்குடியேறி குடும்பங்களுககும் உணவு உட்பட பல்வேறு உதவிகளை வழங்கியதோடு எதிர்கால சந்ததியினரான மாணவர்களின் கல்விமேம்பாட்டிற்கு மிக முக்கியத்துவம் கொடுத்த பல்வேறு உதவிகளை வழங்கிவந்தார்.

சுவாமி விவேகானந்தரின் தத்துவங்களையும் தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் கொள்கைகளையும் நிலை நிறுத்தி உயர் சேவைகளை வழங்கி மக்களை விழிப்படையச் செய்து உயர்வடைய வழிகாட்டியவர் சுவாமி சித்ரூபானந்தா

சுவாமிகளின் சமய, சமூக ஆன்மீகப் பணிகளுக்கு இலங்கை, இந்தியா, அரசாங்கங்களினதும் சாவதேச நாடுகளின் பக்த அடியார்களும் போதிய ஒத்துழைப்புகளும் உதவிகளும் சிறப்பாக இருந்து வந்துள்ளன.

இச்சேவாச்சிரமத்தில் சேவைகள் தொடர்ந்தும் சிறப்பாக இடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சேவாச்சிரம் பணியாளர் சபை அறிவித்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
முன்னாள் செயலாளர்
ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா
சேவாச்சிரமம் (பருத்தித்துறை)

# கச்சதீவு உடன்படிக்கை குறித்து
# மத்திய அரசு மீள் பரிசீலனை



## பா.ஜ.க.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

கச்சதீவு விவகாரத்தில் இந்தியாவின் இறையாண்மை குறித்து மத்திய அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யும் என பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.


தமிழகத்தில் கட்சி விவகாரங்களுக்கு பொறுப்பாகவுள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் பீ முரளிதர் ராவ்வை மேற்கோள் காட்டி த ஹிந்து இதனைத் தெரிவித்துள்ளது.

கச்சதீவு விவகாரத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடு என்னவென ஊடகவிலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் நேற்று முன்தினம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் எல்லை தொடர்பான விடயம் தீர்க்கப்பட்ட ஒன்றென சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசாங்கம் எழுத்து மூலம் அண்மையில் தெரிவித்திருந்தது.

எனினும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமும் மாநிலத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இதற்கு எதிர்ப்புத் வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் கச்சதீவு விவகாரம் சரியான முறையில் கையாளப்படவில்லை என பாரதீய ஜனதாக் கட்சி கருதுவதாகவும் இந்த எழுத்துமூல அறிவிப்பு குறித்து மத்திய அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் முரளிதர் ராவ் கேட்டுக்கொண்டுள்ளார்.



உக்ரைன் இராணுவ அமைச்சராக அறிவிக்கப்பட்டவெல்ரி ஹேலிடேவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறார் அதிபர் பெட்ரோ போரோஷென்கோ.

## உலகச் செய்திகள்

## கென்யாவில் 29 பேர் சுட்டுக்கொலை

(ஹின்டி)

கென்யாவில் கடந்த மாதம் லாமு கடற்கரைக் பகுதியில் உள்ள காம்பா சுற்றுலா நகரில் மர்ம நபர்கள் புகுந்து 60 பேரை சுட்டுக் கொன்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் காம்பா, ஹின்டி ஆகிய நகரங்களில் மீண்டும் துப்பாக்கியால் சுட்டனர்.

அதில், 29 பேர் பலியாகினர். இந்தத் தாக்குதலை அல் கொய்தா தீவிரவாதிகள் நடாத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மொம்பஷா குடியரசு இயக்கம் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இது லாமு கடற்கரைப் பகுதியின் சுதந்திரத்துக்காக போராடி வருகிறது

## நைஜீரியாவில் கடும் போர் இருதரப்பிலும் 58பேர் பலி



(அபுஜா)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான, தெற்கு அட்லாண்டிக் கடலில், கினியா வளைகுடாப் பகுதியில் அமைந்துள்ள நைஜீரியா நாட்டில், தனிநாடு கோரி போராடி வரும், போகோ ஹரம் பயங்கரவாதிகளுடன், அந்நாட்டு இராணுவத்தினர் நடாத்திய சண்டையில், இருதரப்பிலும், 58 பேர் பலியாயினர்.

நைஜீரியாவின் வடபகுதியில், இஸ்லாமிய நாடு அமைப்பதை முக்கிய கோரிக்கையாகக் கொண்டு, கடந்த ஐந்தாண்டுகளாக பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வரும் இந்தப் பயங்கரவாதிகள், நேற்று முன்தினம் நள்ளிரவில், தாம்போவா என்ற நகரில் திடீர் தாக்குதல் நடாத்தினர்.

காவல் நிலையத்தை குறிவைத்து அவர்கள் நடாத்திய தாக்குதலுக்கு, பொலிசார் தக்க பதிலடி கொடுத்தனர். பல மணி நேரம் நடந்த சண்டையில், ஆறு வீரர்கள், 52 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். தப்பியோடிய பயங்கரவாதிகள், நகரில் புகுந்து தீ வைப்புச் சம்பவங்களில் ஈடுபட்டனர்.போகோ ஹரம் என்றால், அந்நாட்டு மொழியில், மேற்கத்திய கல்வி முறை பாவம் என்று பொருள்.

## தேர்தல் அதிகாரி மீது வழக்கு ஜனாதிபதிக்கு விஜயகாந்த் கடிதம்



(சென்னை)

தமிழகத்தில் தே.மு.தி.க., சார்பில், தலைமை தேர்தல் அதிகாரி மீது, வழக்குத் தொடர அனுமதிக்க வேண்டும், என, ஜனாதிபதிக்கு அக்கட்சித்தலைவர், விஜயகாந்த் கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நடந்து முடிந்த லோக்சபா தேர்தலுக்கு, இரண்டு நாட்கள் முன், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, 144 தடை உத்தரவு பிறப்பித்தார். அப்போதே, இந்தத் தடை உத்தரவுக்கு, அரசியல் கட்சிகள் மத்தியில் மிகப் பெரிய எதிர்ப்பு கிளம்பியது. தீவிரவாதிகள் மற்றும் நக்சலைட்டுகள் ஆதிக்கம் இருக்கின்ற மாநிலங்களில் கூட, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

ஆளும்கட்சிக்கு அனுசரணையாகவே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தே.மு.தி.க., கருதுகிறது.வாக்காளர்களுக்கு பணம் மற்றும் இலவச பொருட்களை விநியோகிக்கவும், பல தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடவும், அ.தி.மு.க., இதை பயன்படுத்திக் கொண்டது. தேர்தலில் பணம் கொடுப்பதை தடுக்க முடியவில்லை என, தமிழக தேர்தல் அதிகாரியே, ஒரு பேட்டியில் கூறியுள்ளார். எனவே, தேவையில்லாமல், 144 தடை உத்தரவு பிறப்பித்த, இந்தியத் தலைமை தேர்தல் கமிஷனர் மீதும், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி மீதும், தே.மு.தி.க., சார்பில் வழக்குத் தொடர அனுமதிக்க வேண்டும். இவ்வாறு, கடிதத்தில் விஜயகாந்த் குறிப்பிட்டுள்ளார்.

## "சூப்பர் ஸ்டார்" பட்டம் மீது எனக்கு ஆசையில்லை

### நடிகர் விஜய் தெரிவிப்பு



"சூப்பர் ஸ்டார்" என்பது மிகப் பெரிய அங்கீகாரம் என்றும், அதறகாக தாம் ஆசைப்படவில்லை என்றும் தென்னிந்திய நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

"விஜய் விருதுகள் வழங்கும் விழா சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது. இந்நிகழ்வில் விருதுகள் வழங்கும் பட்டியலில் "ரசிகர களின் விருப்பத்திற்குரிய நடிகர்" விருது, நடிகர் விஜய்க்கு வழங்கப்பட்டது. இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் விஜய்க்கு இவ் விருதினை வழங்கினார்.

விருது பெற்றபின்னர் நடிகர் விஜய் உரையாற்றும் போது, எனக்கு இந்த விருது "தலைவா" படத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

"உங்களுக்குப் பிடித்தது "இளைய தளபதி" பட்டமா அல்லது "அடுத்த சூப்பர் ஸ்டார்" பட்டமா" என்ற கேள்விக்கு பதிலளித்த விஜய், "எனக்கு முதலில் கொடுத்த பட்டமேபோதும். "அடுத்த சூப்பர் ஸ்டார்" பட்டம் என்பது மிகப் பெரிய அங்கீகாரம்தான்.

சினிமாவில் எனக்கும் ஓர் இடம் வேண்டும்என்றுதான் ஆசைப் பட்டனே தவிர, கண்டிப்பாக அடுத்த "சூப்பர் ஸ்டார்" பட்டத்திற்கு ஆசைப்படவில்லை. என்னை விட நன்றாக நடிக்கிறவங்க, அழகா இருக்கிறவங்க நிறையப் பேர் இருக்காங்க. எப்பவுமே நான் ஒரு சாதாரணமான மனிதர் நான் என அவர் இதன்போது தெரிவித்தார்.

## ஆளில்லா கவச வாகனங்கள் தயாரிக்கிறது அமெரிக்கா



(வொஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தில், விரைவில், ஆளில்லா கவச வாகனங்கள், தாங்கிகள் போரில ஈடுபடுத்தப்படவுள்ளன. போர்களின் போது, மனித உயிர் இழப்பை தவிர்க்கும் வகையில், மனித மூளையைப் போல் சிந்திக்கக் கூடிய கருவிகளை அத்தகைய வாகனங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சாரதி இல்லாமல் இயங்கும் வாகன தொழில் நுட்பத்தை, அமெரிக்காவின்,கூகுள் இணையத்தளம் பின்பற்றுகிறது.அந்த தொழில் நுட்பத்தைப் போல், அமெரிக்க் இராணுவமும், ஆளில்லா கவச வாகனங்கள் மற்றும் தாங்கிகள் தயாரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

எதிர்கால போர்களில், வீரர்கள் உயிரிழப்பை தடுக்கும் வகையில்,இந்த தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அந்நாட்டின் தெற்கு கரோலினா நகரில் சமீபத்தில் நடைபெற்ற இராணுவ வாகன கண்காட்சியில், மணிக்கு, 67 கி.மீ., வேகத்தில் செல்லும், ஆளில்லா வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அது போன்ற தொழில்நுட்பத்தை, கவச வாகனங்களுக்கும் தாங்கிகளுக்கும் பயன்படுத்தி, 2019இற்குள் ஆளில்லா தாங்கிகள் தயாரிக்கப்படும் என, அந்நாட்டு இராணுவத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# கபட நோக்கிலான அரசியல் கொள்கையால் தமிழ் மக்களுக்கு தொடர்கிறது துன்பம்

## மாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



மக்களின் நலன்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித அக்கறையும் அற்றவர்களாகவே பாரம்பரிய தமிழ் அரசியல் தலைவர்கள் செயற்படுகின்றார்கள். ஆகவே, மக்கள் ஆயிரக்கணக்கில் அல்ல இலட்சக்கணக்கில் அல்ல தமிழ் இனமே முற்றாக அழிந்தாலும் இவ்வாறானவர்கள் கவலைகொள்ளப் போவதும் இல்லை. கபட அரசியல் கொள்கையிலிருந்து மாறப் போவதுமில்லை என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தருமக்கேணி சின்னத்தாளையடியில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரால் நடத்தப்பட்ட மக்கள் குறைகேள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அதிகாரங்களை சரியானவர்களிடம் கொடுக்காமல் செயற்திறனற்ற சோம்பேறிகளிடம் கொடுத்ததன் பலனை இன்று தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது இன்று நேற்று நடைபெறும் விடயமல்ல. கடந்த 1977 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறு தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதனால் மக்களுக்கு எவ்விதப் பயனும் கிட்டியதில்லை. அதன் பலனாக கடந்த காலங்களில் மிகப் பெரும் விலைகளைக் கூட கொடுக்க நேர்ந்தது.

ஆனாலும், மக்களை ஏமாற்றுபவர்கள் தொடர்ந்தும் உருவாகிக்கொண்டே இருக்கின்றார்கள். அவர்களை மக்கள் தொடர்ந்தும் ஆதரித்துக்கொண்டே இருக்கின்றார்கள். இது எமது மக்களின் மேம்பாட்டுக்கு பாரிய சவால்களாகவே அமைகின்றது எனக் குறிப்பிட்ட வை.தவநாதன்,

இதனால் பாதிப்புக்களையும், அழிவுகளையும், சாவுகளையும் எதிர்கொண்டது ஒருசிலரல்ல. பல ஆயிரக்கணக்கானோர். இருப்பினும், அவர்கள் தமது கபட அரசியல் நோக்கிலிருந்து மாறவில்லை. தொடர்ந்தும் முன்யோசனைகள் அற்ற தீர்க்கமான ஆழ்ந்த சிந்தனைகளற்ற செயற்பாடுகளையும் மக்களை மீண்டும் பலி கொடுக்கும் நடவடிக்கைகளையுமே முன்னெடுத்து வருகின்றனர்.

ஏனெனில், அந்த வழிமுறை மூலமே மக்களை இலகுவாக உணர்ச்சிவசப்படுத்த முடியும் எனவும் உளவியல் ரீதியாக மக்களின் மனங்களை வசியப்படுத்த முடியும் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

எனவே, இன்றைய சூழலில் மக்களே தமது மேம்பாடு குறித்தும் தமது முன்னேற்றங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். அதற்காக மக்களும் தமது பாரம்பரிய அரசியல் கொள்கையிலிருந்து மாற வேண்டும். மக்களின் தெரிவுகளும் செயற்திறன் மிக்கவர்களிடம் அதிகாரங்களை வழங்கும் வகையில் அமைய வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தருமக்கேணி, சின்னத்தாளையடி ஆகிய கிராம மக்களின் தேவைகள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரால் நடாத்தப்பட்ட இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் இராசதுரை ஆகியோரும், தருமக்கேணி கிராம அலுவலர் தனேஸ்வரன், அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவையாளர் தருமலிங்கம் மற்றும் பூதவராயர் விளையாட்டுக் கழகத் தலைவர், செயலாளர்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பூதவராயர் விளையாட்டுக் கழகத்தின் மைதானம் புனரமைத்தல் மற்றும் உள்ளக வீதிகளின் புனரமைப்பு, வீட்டுத்திட்டம் பெறாதவர்களுக்கு வீடுகளை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்தோடு குறித்த கிராமத்தில் வசிக்கும் பெண்களுக்கான தொழில் வாய்ப்பு அல்லது வாழ்வாதார வருமானங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அத்தோடு இதற்கான செயற திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

# டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்று முதல் வடமாகாண சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நுளம்பு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் வலயமாகப் பிரித்து பிரதேச செயலகங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு பொலிஸாரின் உதவியுடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வலயமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

தொடர்ந்து ஏழு நாட்களும் நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், சிரமதானங்கள் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (பா)

# இந்திய வீட்டுத்திட்டம் எங்களுக்கு இல்லையா?

## ஒட்டுசுட்டானில் பொதுமக்கள் போர்க்கொடி

ஒட்டுசுட்டான் பிரதேச உதவி பிரதேச செயலருக்கு எதிராக அப்பிரதேச பொதுமக்கள் சிலர் சில தினங்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இந்திய வீட்டுத் திட்டத்தில் உதவி பிரதேச செயலர் சில முறைகேடுகளை செய்துள்ளதாக அவர்கள் குற்றம்சாட்டியதுடன் ஆர்ப்பாட்டத்தின்போது அவருக்கெதிராக சில சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். நிரந்தரமான பிரதேச செயலர் ஒருவரை நியமிக்குமாறு அவர்கள் வற்புறுத்தி குரல் எழுப்பினர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 110 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று உதவி பிரதேச செயலருக்கு எதிராக கொழும்பு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், புலனாய்வு வழிகாட்டல் பிரிவு, வடமாகாண ஆளுநர், ஜனாதிபதி, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆகியோருக்கு ஆர்ப்பாட்டக்காரர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஒட்டுசுட்டான் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கும்போது இவ்ஆர்ப்பாட்டம் திட்டமிட்டு சிலரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (137)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஊடக பயிற்சிநெறிகளுக்குத் தடை

இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்தியாளர்களுக்கான பயிற்சி நெறிகளையோ, அல்லது கருத்தரங்குகளையோ நடத்தக்கூடாதென்று பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கையொன்றின் மூலம் அறிவித்திருக்கிறது.

சில அரசசார்பற்ற நிறுவனங்கள், ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் என்பவற்றை நடத்துவதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும், இது அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளல்ல என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே அதிகாரமளிக்கப்படாத இந்த நடவடிக்கைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளரும், பதிவாளருமாகிய டி.எம்.எஸ்.திசாநாயக்க அறிவுறுத்தியிருக்கின்றார்.

பாதுகாப்பு அமைச்சின் இந்த நடவடிக்கையானது, அதிர்ச்சியளிப்பதாக அமைந்திருப்பதாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து பி.பி.சி. தமிழோசையிடம் கூறினார்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்தியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக் அமையுமானால், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நாட்டில் எத்தனையோ சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.

இந்த நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள இந்த கட்டுப்பாடானது, நாட்டின் ஊடக சுதந்திரத்திற்கு விழுந்துள்ள மோசமான அடியாகவே கருத வேண்டியுள்ளது என பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதியிடப்பட்டு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த சுற்றறிக்கை திங்களன்று தங்களுக்குக் கிடைத்திருப்பதாகத் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

### வடக்கில் உ...

தீவகம் கடல் கடந்த பாடசாலைகளுக்கு 2 பேரும், வடமராட்சி, மருதங்கேணி கல்வி வலயத்திற்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

### நல்லிணக்க...

தென்னாபிரிக்க பதில் ஜனாதிபதி சிறில் ரமபோஸாவை நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன ஆகியோர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று வரவேற்றனர்.

இலங்கையர்கள் என்ன சொல்கின்றார்கள் என்று அறிவதே எமது பிரதான நோக்கம். இதற்காக அங்குள்ள பல்வேறுபட்ட தலைவர்களை நாம் சந்தித்துப் பேசவுள்ளோம். அத்துடன் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு எமது ஆதரவை வழங்கி நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு உதவுவதும் எமது நோக்கமாகவுள்ளது. இவை தவிர இலங்கையில் சொந்தமாக அரசமைப்புச் சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு உதவுவதும் எமது நோக்கமாகும் என்று ரமபோஸா குழுவினர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தனர்.

அதேவேளை ரமபோஸா குழுவினர் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் இன்று சந்தித்து பேச்சுக்களில் ஈடுபடவிருக்கிறார். இதன்போது வடக்கு நிலைவரம் குறித்து விரிவாக ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஆஸி.நோக்கிச்...

கடற்படையினரின் ரோந்துக் கப்பல் சமுத்ரா அவர்களை காலித் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றது. மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் குற்றவிசாரணை பிரிவினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் தென் கடற்பரப்பில் வைத்து 41 புகலிடக் கோரிக்கையாளர்களும் அவுஸ்ரேலிய கடற்படையினரால் இலங்கை கடற்படையினரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டனர்.

### வடக்கில்...

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மன்னார் ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு விளக்கவுரைகளை நிகழ்த்தினர்.

இதில் முக்கியமாக அமைச்சின் கீழான நிறுவனங்களினால் பனைசார்ந்த, தும்பு, தோல், மட்பாண்டம், புடவை, உலோகம் உள்ளிட்ட தொழிற்துறை மேம்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

நிதியொதுக்கீடு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் தொழிற்துறை சார்ந்த பயிற்சி உற்பத்தி, சந்தைவாய்ப்பு, தேவைகளின் அடிப்படையிலான கோரிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதனிடையே அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் தொழிற்துறை முதலீட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கட்டுமானப்பணிகள் தொடர்பாகவும் புதிய முதலீட்டாளர்களை உள்வாங்குவது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க, பனை அபிவிருத்தி சபை தலைவர் பசுபதி சீவரத்தினம், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் இரட்ணம் மலாலா, யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் உள்ளிட்ட அமைச்சினதும், நிறுவனங்களினதும் பொதுமுகாமையாளர்கள், பணிப்பாளர்கள் உள்ளிட்டோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்களான ஜெகன், தவநாதன், கிருபன், ரகு, லிங்கேஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

### கட்டாய...

இருந்தவர்களை, விடுதலைப் புலிகள் ஆயுதங்களை காண்பித்தும், தமக்கு அடித்தும் தங்கள் பிள்ளைகளை கொண்டு சென்றதாக மக்கள் சாட்சியமளித்துள்ளதுடன், அதன் பின்னர் அவர்கள் காணாமற்போயுள்ளதாக சாட்சியம் வழங்கியிருக்கின்றனர்.

மேலும் இவ்வாறு காணாமற்போனவர்கள் பலர் போர் 2009 ஆம ஆண்டு நிறைவடைந்ததன் பின்னர் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த ஓமந்தை மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் வைக்கப்பட்டிருந்ததை உறவினர்கள் கண்டுள்ளதாகவும், சாட்சியமளித்திருந்த மக்கள் தங்கள் சாட்சியின்போது குறிப் பிட்டுச் சொல்லியிருக்கின்றனர்.

அத்துடன், கடுமையான ஷெல் வீச்சுக் காரணமாக தங்கள் இருப்பிடங்களை விட்டு அவசர அவசரமாக வெளியேறும் போது உறவினர்களையும், பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்றவர்கள் தொடர்பான சாட்சியங்களும் நேற்றைய தினம் வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வடக்கில் வாழ்வாதார உதவி

## விரைவில் அமுலாகிறது செயற்றிட்டம்

(கொழும்பு)

வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்க அரசு நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'திவி நெகும' திணைக்களத்துடன் இணைந்து சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு முரண்பாட்டின் காரணமாக விதவைகளாக்கப்பட்டுள்ள பெண்களுக்கான வாழ்வாதார உதவி நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்தி வருகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்டம் வடக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் கருத்தின்படி, வசதிகள் வழங்கப்படுவது வடக்கு மாகாணத்திலுள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளில் ஏற்கனவே இடம்பெற்றுவருகின்றது.

இந்தப் பெண்கள் நிரந்தர வருமானம் பெறும் வழியொன்றின் தேவையில் உள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) திருமதி. அஷோக்கா அலவத்த தெரிவித்தார். இந்தப் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கள் மூலமாக உதவிகளை வழங்குவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களது வியாபாரங்களுக்குத் தேவையான உபகரணங்கள் அல்லது பொருட்களை வாங்குவதற்கு மானியங்கள் வழங்கப்படும் என திருமதி. அலவத்த தெரிவித்தார்.

திருமதி. அலவத்தவின் கருத்தின்படி, முதற்கட்டத்தின் போது வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச சபைப் பிரிவுகளிலிருந்தும் பெண்கள் தலைமை தாங்கும் 25 குடும்பங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து பயன்பெறும்.

இந்த முன்னெடுப்பில் பல அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்குபெறுகின்றன. ஜேர்மன் நிறுவனமான Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH இன் நிதி உதவியுடன் அமைச்சின் கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் உளவளத்துணையில் பயிற்சியளிக்கப்பட்டனர்.

பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தோடு கெயார் சர்வதேச நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவிலுள்ள பிரிவுகளுக்கு உதவிகளை வழங்குகிறது, என அமைச்சின் அறிக்கையொன்று தெரிவித்தது. தூர இடங்களை அணுகுவதற்காக பெண்கள் அபிவிருத்தி அலுவலர்களுக்கு 22 மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 9.87 பரிந்துரைக்கு அமைவாக இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுவருவதாக அமைச்சு தெரிவித்தது.

# பூநகரி மருத்துவமனையில் மருத்துவ விடுதி வசதி இல்லை

(பூநகரி)

கடந்த எட்டு மாதத்துக்கு மேலாக பூநகரி அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களுக்கான விடுதி வசதி திடீரென நிறுத்தப்பட்டதால் பூநகரிப் பிரதேச சபையைச் சேர்ந்த நோயாளர்கள் பலர் பெரும் அவல நிலைக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அது மட்டுமன்றி கடும் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் சுமார் 35 கிலோ மீற்றருக்கு மேல் பெரும் பணச் செலவில் பிரயாணம் செய்து யாழ்ப்பாணத்துக்கோ, கிளிநொச்சிக்கோ சென்று சிகிச்சை பெறும் அவல நிலைக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வாரத்துக்கு மேலாக நிறுத்தப்பட்ட இச்சேவை மீண்டும் சகல வசதிகளும் உள்ள பூநகரி வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறக்கூடிய விடுதி வசதியை மீண்டும் ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(112)

# அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு

யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு நாளை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர்கள் யாவரும் சீருடையுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் சமூகம் தருமாறு இக்கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கின்றார்.

# பிரித்தானிய சிறையில் இலங்கையர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற இலங்கை கைதி ஒருவர், பிரித்தானியச் சிறையில் உயிரிழந்துள்ளார்.

56 வயதான கந்தையா குகதாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இங்கிலாந்தின் ஹெம்ஷியர் பிரதேசத்தில் வின்செஸ்டர் சிறைச்சாலையின் எச்.எம்.பி. பிரிவில் உள்ள சிறையறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே இவர் உயிரிழந்துள்ளார்.

இவர் சில தினங்களாக சுகவீனமுற்றிருந்தாக சிறைச்சாலை நிர்வாகி சவுத்ஹேம்டன் திடீர் மரண விசாரணை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய ஹெம்ஷயர் பிரதேசத்தில் திடீர்மரண விசாரணையாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், உயிரிழந்தவர் மதுபான பழக்கத்திற்கு அடிமையாகி இருந்ததாகவும் இதனால் நோய்வாய்ப்பட்டிருந்தாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் தான் கடும் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப் பட்டதாக கூறி, கந்தையா குகதாஸ் 2000 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதற் பெண்மணிக்கு சீனாவில் வரவேற்பு

சீனாவின் ஒன்றிணைந்த மகளிர் அமைப்பின் அழைப்பை ஏற்று சீனாவுக்குச் சென்றுள்ள முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் மாலை பீஜிங் நகரில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

சீனாவின் ஒன்றிணைந்த மகளிர் அமைப்பின் செயலாளர் எம்.எம்.ஈ. ஜியாங்யங் தலைமையிலான குழுவினர் முதற் பெண்மணியை வரவேற்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் சீனாவுக்கான இலங்கை தூதுவர் ரஞ்சித் உயன்கொட, திருமதி ரஞ்சித் உயன்கொட மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கமலா ரணதுங்க ஆகியோரும் பங்குபற்றினர


## பணியாளர்கள் தேவை

கீழ்வரும் பணியாளர் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- இயந்திர இயக்குநர்கள்
- இயந்திர உதவியாளர்கள்
- இயந்திர வேலை பழக விரும்புபவர்கள்

KORD, SORD ஆகிய அச்சு இயந்திரங்கள் இயக்கக் கூடிய முன் அனுபவம் வாய்ந்த ஆண் பணியாளர்கள் உடனடி யாகத் தேவைப்படுகின்றனர்.

**தகைமைகள்**

- தேக ஆரோக்கியம் உடையவராகவும்
- இரவு பகல் பணியாற்றக்கூடியவர்களாகவும்
- பத்திரிகைத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமைகள் உடையவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன், அலுவலக நேரத்தில் எமது காரியாலயத்திற்குச் சமுகம் தரவும்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தினமுரசு நாளிதழ்
இல.373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


# அத்தியாவசிய ஆவணங்கள் விநியோகம் கிளிநொச்சியில் நடமாடும் சேவை

(கொழும்பு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் கரைச்சி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை ஒன்று எதிர் வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் நடைபெற உள்ள இச் சேவையில் பங்குபெறுவோருக்கு புகைப்படம் எடுத்தல், தபால் செலவுகள் யாவும் தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் வழங்கப்படும்.

இச்சேவையில் பிறப்பு சான்றிதழ் தொடர்பான சேவைகளான பிறப்பு பதிவு, காலங்கடந்த பிறப்பு பதிவு, இலங்கைக்கு வெளியில் நிகழ்ந்த பிறப்பு, பிறப்பு சான்றிதழின் பிரதி எடுத்தல் போன்ற சேவைகள் வழங்கப்படும்.

அத்துடன் இறப்பு சான்றிதழ் தொடர்பான சேவைகளான இறப்பு பதிவு, காலங்கடந்த இறப்பு பதிவு, இலங்கைக்கு வெளியில் நிகழ்ந்ததான இறப்பு பதிவு, இறப்பு சான்றிதழின் பிரதி எடுத்தல் ஆகிய சேவைகள் வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டை புதிதாக எடுத்தல், திருத்தம் செய்தல், புதுப்பித்தல், முதியோர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல் போன்ற சேவைகளும் வழங்கப்படும்.

தொலைந்த ஆவணங்களுக்கான பொலிஸ் அறிக்கைகள், இலவச ஆயுர்வேத சிகிச்சை, இலவச சட்ட ஆலோசனைகள், வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கான சேவைகள் தொழில் வழிகாட்டல்கள் என்பனவும் வழங்கப்படும்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி தொடர்பான (NAITA) சேவைகள், இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையின் (VTC) சேவைகள், தொழில் வங்கியின் (JOB BANK) சேவைகள் விசேட தேவையுடைய நபர்களுக்கான தொழில் வழிகாட்டல்கள், கடவுச்சீட்டு (PASSPORT) தொடர்பான சேவைகள் ஆகியனவும் வழங்கப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் தொடர்புடைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் பங்குபற்ற உள்ளதால் இத்தகைய சேவைகள் தேவைப்படுவோர் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு கரைச்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(90)

# வடக்கில் 706 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடந்த ஆனி மாதம் வரையான காலப் பகுதியில் 706 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். யூட் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 516 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்த அவர், வவுனியா மாவட்டத்தில் 31 பேரும், மன்னாரில் 19 பேரும், கிளிநொச்சியில் 75 பேரும், முல்லைத்தீவில் 64 பேரும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தில் டெங்கு நோய் காரணமாக இறப்பு எதுவும் நிகழவில்லை. கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் ஒரு இறப்பு இடம்பெற்றதாகவும் தெரிவித்தார்.

எனவே இந்த நோய்த்தாக்கத்தை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற வடமாகாண சுகாதார சேவைகள் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றதாகவும், அதில் அந்தந்த மாவட்டங்கள் நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை பிரகடனப்படுத்தி செயற்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் கடந்த வாரம் வவுனியா மாவட்டத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் செயற்படுத்தப்பட்டது. இந்த வாரம் யாழ். மாவட்டத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்த அவர் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களில் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

(பா)

# இந்திய வியாபாரிகள் இருவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட இரண்டு இந்திய வியாபாரிகளை நாவாந்துறைப் பகுதியில் வைத்து நேற்று திங்கட்கிழமை கைது செய்ததாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யபட்ட இவ்விருவரும் கணவன் மற்றும் மனைவி என பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழகம் மதுரையைச் சேர்ந்த சுப்பையா இராமராஜா (45), இராமராஜா சுவலக்ஸ்மி (40) ஆகிய கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து இரண்டு பொதிகளில் புடவைகள் மீட்கப்பட்டதாகவும் அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.